108905

O-,8P2K91K9,G
N54
108905

தேவிசகாயம்

வடவேங்கடமென்னும் திருப்பதியில்

ஜனித்தோங்கும்

# கெங்கையம்மன் நாடகம்.

C

இஃது

வளவனூருக்கடுத்த சாலை

கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

இயற்றியது.

Accn. NO: 108905
94 pages
MKP

---

கோகுலாபுரம் - அருணாசல முதலியாரால்

பார்வையிடப்பட்டது.

---

டி. ஆர். வெங்கடேச முதலியாரவர்களிடமிருந்து

காப்பி ரையிட் பாத்தியதையைப் பெற்றது.

---

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள் விலாச அச்சு நிலையம்,

சென்னை.

---

காபிரையிட்]     1954.     [விலை ரூபா 1.

O-,892'MKP,G
N54

108905

O-,892MKP,G
N54e



கடவுள் துணை

தேவி சகாயம்

# கெங்கையம்மன் நாடகம்

விநாயகர் காப்பு

பாயிரம்

விருத்தம்

சீர்பரவுமுலகேத்துங் கைலைவாசன்
  செஞ்சடையிலிருந்தாடு கெங்கையம்மன்
பேர்பரவுஞ்சரித்திரத்தை யுலகந்தன்னிற்
  பேசரியநாடகமாய்ச் சொல்லவோங்கும்
பார்பரவுமிமையகிரி வேந்தனீன்ற
  பார்வதியாள்தந்தவரு முகற்குமூத்த
கார்பரவுந்திருவணிமால் மருகனை
  கணபதியினிருசரணங் காப்புதானே.

சுப்பிரமணியர்-துதி

விருத்தம்

ஆதிமால்மருகனை வைங்கரன்பாதம்போற்றி
சோதிசேர்கெங்கையம்மன் தூயநாடகத்தைப்பாட
வேதியன்றனைறெண்டித்த வேலணிகரத்தோனை
கோதிலாவுமையாளீன்ற குமரவேள்பாதம்போற்றி.

விநாயகர்வருகிற-விருத்தம்

பாரிலங்குகைலைமலை நாதன்றனும்
  பண்புடனேயுமைக்கினிதாய்த் தந்தபாலன்
பேரிலங்குங்கனகமணி மகுடன்தன்னப்
  பெருச்சாளிவாகனத்தி லன்பாயேரி
ஏரிலங்குங்கரிமுகமுங் துதிக்கையாட
  யிங்கிதஞ்சேர்முனிவர்மலர் சொரிந்துபோற்றச்
சீரிலங்கும்வளவனகர் தன்னின்மேவுஞ்
  செங்கழனிவைங்கரும் வருகின்றாரே.



விநாயகர்வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

வந்தாரேசெங்கழுனிநாதர் வல்லமைபாகன்
வந்தாரேசெங்கழுனிநாதர்

அநுபல்லவி

வந்தார்விநோதமாக வானவர்மலர்சொரி
யிந்திராதிமுனிவர்க ளிருபுரநெருங்கிட வ..

சரணங்கள்

மணிமகுடமிலங்க வண்ணப்பணிகளாட
அணியணியாய்க்கணங்க ளனேகர்நெருங்கிடவே வந்

அங்குசபாசமிலங்க ஆகுவாகனமேறி
வெங்கயமுகமிலங்க கிண்கிணியரையிற்கொஞ்ச வந்

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப் பிரகாரம் வளவனூரில் திருக் கோயிற் கொண்டெழுந்தருளி ஸ்ரீ செங்கழுனிவிநாயகர் கெங்கையம்மன் சபைக்கு வந்தபோது அக்கடவுளைப் பூசிக்கும் குருக்கள் வருகிற விதங்காண்க.

பொது விருத்தம்

கோதிலாவளவனூரிற் குலவிவாழ்கணநாதற்கு
வேதநான்கதனிலோதும் விதிப்படிபூசைசெய்ய
தாதவிழ்மலரிநோடுந் தன்பனற்கொண்டுவையற்
சோதிமுப்புரிநூற்றன்ன துரிதமாய்வருகின்றார்.



குருக்கள்வருகிறதரு-இ-ம்-காம்போதி-அடதாளம்

பல்லவி

வேதியர்வந்தாரே பூசனைபுரி
வேதியர்வந்தாரே

அநுபல்லவி

ஓதற்கரும்வளவனூரிற் றுலங்கிநாளும்
நீதியாயருட்செய நிமலனைப்பூசிக்க வேதி

சரணங்கள்

மஞ்சநீராடி வெள்ளிக்கடத்தில்
மலர்கள் பலவுந்தேடி
தஞ்சமென்றடைந்தோற்கு தயைசுரக்கும்பெம்மானை
குஞ்சிதபாதத்தானை கோதிலானைப்பூசிக்க வேதி

பஞ்சாட்சரங்கள்துலங்க திணிகொள்மார்பிற்
பளிங்குமாமணி யிலங்க
செஞ்சாலிகளுஞ்சூழ்ந்தே செழிக்கும்வளவனூரில்
மஞ்சாருங்கோபுரங்கள் வயங்கும்கோயிலைநாடி வேதி

அப்பமுப்பழத்தோடு யவற்கடலை
யடிசிற் பலவுநீடும்
செப்பரியநாதற்கு சிந்தைமகிழ்கொண்டு
சேனுலகோர்தமது சித்தம்பிரமிக்கப்பண்டு வேதி

வசனம்

இந்தப்பிரகாரம் கணநாதரைப் பூசைசெய்யுங் குருக்களானவர் மஞ்சனமாடி ஜெபதபங்களை முடித்துப்பின் வெள்ளிப்பாத்திரத்தில் அபிஷேகநீரும் மல்லிகைமுல்லை இருவாட்சி யென்னுமலர்களுங்கொண்டு ஆராதனைக்கு வேண்டிய அவல்கடலையப்பமுப்பழமென்னுருண்டையுடனும் வந்து கணநாதனுக் கபிஷேகஞ்செய்து மலர்சூடி விதிப்படி பூசைசெய்யும் விதங்காண்க.

குருக்கள் கணேசனைப் பூசிக்குமந்திரம்

ஓம் சுமுகாயநமா ஓம்-ஏகதந்தாயநமா
ஓம்-கபிலாயநமா ஓம்-கஜகர்ணிகாயநமா
ஓம்-லம்போதராயநமா ஓம்-விகடாயநமா
ஓம்-விக்கினராஜாயநமா ஓம்-கணாதிபதியேநமா

ஓம்-தூமகேதாயநமா
ஓம்-பாலசந்திராயநமா
ஓம்-ஹேரம்பாயநமா
ஓம்-கணாதிதேசுஷாயநமா
ஓம்-சூர்ப்பகர்ணாயநமா
ஓம்-ஸ்கந்தபூர்வஜாயநமா
ஓம்-மகா கணாதிபதியேநமா

வசனம்

இந்தப்பிரகாரம் கணநாதரைப் பூசித்த குருக்கள் சென்ற பிறகு சத்யலோகவாசியாகிய பிரமதேவன் சபைக்கு வருகிறபடியால் அச்சபையை அலங்காரஞ்செய்து காற்குங் கட்டியக்காரன் வருகிற விதங்காண்க.



கட்டியக்காரன் வருகிறதரு-பொதுவிருத்தம்

வடிவாளுங்கரத்திலேந்தி வாகுவல்லயமும்வெள்ளித்
தடியுடன்சரிகைப்பாகை ஜமுதாடுமலங்கரித்தே
கெடிபெறமுருக்குமீசை கெம்பீரமாய்த்துலங்க
கடுகியேபிரமன்வாசற் கட்டியன்வருகின்றானே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பிரமதேவன் சபையைக் காற்கும் கட்டியன் ஜமுதாடுமுதலிய பிரம்புகொண்டு ஆக்ரமித்து மீசையைமுருக்கி எதிர்நின்றவர்களை யதட்டிவருகிற விதங் காண்க.



தரு இ-ம்-அபரூபம் ஆதி

பல்லவி

வெண்ணெயுண்டமாயன்றந்த வேதனிடவாயற்காற்கும்
தண்மையுள்ளகட்டியனும் வந்துமேவினான்

அநுபல்லவி

பொற்சரிகைப்பாகையுட பூண்டபணிகள்துலங்க
கன்னபரிசையிலங்க கட்டியக்காரன்மேவினான் வெ

சரணங்கள்

மட்டிலாக்கீர்த்தியோங்கு மாயன்மைந்தன்வாசற்காற்கும்
கட்டாரியுடைவாள்நீண்டு கட்டியக்காரன்மேவினான் வெ

தங்கப்பணிகள்துலங்கத் தாவியேநடைநடந்து
கங்கையம்மன்பாதம்போற்றி கட்டியக்காரன்மேவினான் வெ

வசனம்

அகோதெப்படியென்றால் ஆஆ சத்யலோகவாசனாகிய பிரமன் சபைக்கு வருகிறபடியால் யாவரும் பேசாதீர்கள் சத்து சத்து.

பிர்மதேவன்-சபைக்குவருகிற-தரு

பொது விருத்தம்

உசிதவெண்கமலவாணிக் குகந்திடுமழகுகாந்தன்
பசுபதிபரமன்மெச்சப் பாரியகெதையையேந்தி
யிசையுடகீதம்பாட வெழிற்பணியலங்கரித்தே
திசைமுகமுடையபிரம்ம தேவனும்வருகின்றாரே.

வசனம்

அகோதெப்படியென்றால் கலைமகட் கினியவனாகியும் சத்தியலோக மாளப்பட்டவனாகியு மிலங்குந் திசைமுகபிரமன் அனந்தம் பணிகளைப்பூண்டு பரமனாகிய கைலாசபதி மெச்சும்படியாய் சபைக்கு வருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-வராளி அடதாளம்

பல்லவி

வேதனும்வந்தானே வுலகளிக்க
நாதனும்வந்தாரே

அநுபல்லவி

சீதாளருடனே செந்திருவுங்களிக்க
தேசுலாவவே பூசுகந்தமும் வாசமிஞ்சியமாலையாடவே வே

சரணங்கள்

அண்டர்களியாவருங் கண்டடிதாழவே
யெண்டிசை துதிபெற்ற தண்டங்காத்திலேந்தி
யிலகுமணிமுடி தகதகென்னவே
பலவிதப்பணி யொளிகள்மின்னவே வே

கன்னியர்நடனமாது விஞ்ஞையர்க
ளுன்னித மாகப்பாட
அன்னவாகனத்திலேறி யாணிமுத்துப்பணிமின்ன
தன்னிகர்குடைகவிக்கச் சாமரைகளெங்கும்போட வே

சதுர்சேர்முனிவர்வீச அசுஷதையள்ளி
துதிமிகத் தேவர்பேச
மதுரவாணியுடன் வடிவுள்ளவிளங்குமிக
கதிமதிமங்கள தொனியெங்குமோங்கவே வே

பிரமன்சொல் விருத்தம்

சிந்துசூழுலகோர்மெச்சச் சீர்கொளுசபையிலோங்கும்
விந்தைதேசமநுவென்றே வேதமந்திரியேகேளாய்
உந்தியாலெனையளித்த வுலகளந்தோன்களிக்க
சந்ததமவன்றுளேத்திச் சதிருடன்வாழுவோமால்.

வசனம்

அகோதெப்படியென்றால் கடல்சூழுலகில் ஓங்கும்மாந்தர்கள் மெச்சும்படியாகிய விந்தையையும் மதியையுமுடைய மநுவென்று சொல்லத்தக்க மந்திரி என்னைத்தனது உந்திகமலத்தி னிடமாய் ஜனிப்பித்துப் புவியின்கண்யிலகும் எழுலகைத் தோற்றத்தையுஞ் சிருஷ்டிக்கும்படியாக அருளைத்தந்த ஆண்டவனது பாதாம்புயத்தை யனுதினமுமறவாமல் துதித்துவருவோம் மந்திரி.

எமதருமராஜன் கொலுவிற்குவரும்

பொது விருத்தம்

கொடிமுடிதன்னைச்சூடி கிரிலாத்தண்டமேந்தி
அடிமிதகாலதூதாஞ்சலி செய்துசூழ



கிடிகொளும்பகட்டின்மீது சிரியதுபோலவோது
மிடிநிகர்சூலையுற்ற யேமராஜன்வந்தானே.

இதுவுமது-தரு-இ-ம்-சாவேரி-அடதாளசாப்பு

பல்லவி

தேசதெண்டனைசெய்யு மீசனேமதரும
ராஜன்விஸ்வாசன்வந்தான் கிடாவிலேறி-ராஜ

அநுபல்லவி

மாசிலாமணிமுடிபேசுங் கதிர்பெற்றுன்னை
தேசுலாவும்பிரமன் சிறப்பதெங்கணுமன்ன
மற்றுமுள்ளசதிசுத்தவீரரும் சித்ராதியோர்பத்திசெய்யவே வேத

சரணங்கள்

நீலகிரிசதுபோற் றேளிரண்டிமிலங்க
காலபாசமுங்கையிற் சூலதெண்டந்துலங்க
நிகரிலிருசெவிகுண்டலங்கடுன்ன பகருமுநிவர்கள்பண்பதாய்துண்

வந்ததூதரெவரு மலரடிவணங்கிட
மூந்தும்பிறையைப்போலத் தந்தங்களொலியிட
தண்மைசேர்தாள்பூரிபேரிகை யெண்ணிலாதடமாரமொலிசெய்தே

உருண்டவிழிபடைத்தே யிரண்டபார்வையுடனே
யிருண்டமலையைப்போலே திரண்டபுயத்துடனே
மூந்துமொழியுடன்வந்தசூரியன் விந்தையாகவேதந்தருமணி தே

எமன்-சித்திராபுத்திரனுக்குச்சொல்-விருத்தம்

செய்தொழிலறிந்திருக்குஞ் சித்திராபுத்திரனேகேளாய்
அய்யமுற்றுலகுமெங்கு மக்ரமமிகுந்ததாலே
மெய்யதற்கொழிவிலாத வேலைகள்வந்துதிப்போ
தெய்வமேஇதற்குவேறே செய்தொழிலறிகிலேனே.

வசனம்

வாருமப்பர் சித்திராபுத்திரனே உலகின்கண் என்றால் நடத்தப் படுந்தொழில் யாவுமறிந்த நீயாதலால் இப்போது புவியில் அக்ரமங் கள் மிகுதியாயிருப்பதால் எனக்கு ஒழிவில்லாத வேலைகள் நேரிட் டிருப்பதால் அதற்கென்ன செய்வேனப்பா.

### இதுவுமதுபுலம்பல்-தரு-இ-ம்-கமாஸ்-அடதாளம்

#### கண்ணிகள்

சூரியன்சுதனாகிவீரியஞ்செலுத்தினான் வந்தேன்-இப்போ
பாரிலக்ரமமிஞ்சி மாராத்தொழில்செய்து நொந்தேனே

ஆலகாலமுண்ட சூலபாணியிக்கோல மாச்சுதையோ எந்தன்
காலதூதருக்கும் வேலையொழிவில்லாமல் போச்சுதையோ

பதவிக்கிடமில்லாமல் மதங்கொண்டார்மானிடர்சங்கரனே - தொழி
மிதமில்லையாதலினால் வேருவகையறியேன் சங்கரனே [லோ

மண்டலத்துமானிடர் துண்டத்தனத்தினாலே சங்கரனே அவரை
கண்டிக்கவோவெனது கைகள்மிகச்சோறுதே சங்கரனே - எனக்கு

பரமேயிவ்வுலகினிற் பாபமிகுத்ததாலே-சங்கரனே
வரவரத்தொழில்மிஞ்சி வருத்துதென்செய்குவேன் சங்கரனே

அன்னியாயமாயுலகிரக்ரமமிகுந்திடச்சங்கரனே-ஏழையு
யென்னால்முடியுமோ இவ்விருதொழிலதுசெய்ய-சங்கரனே

### இதுவுமது விருத்தம்

காலதூதுவரேயெந்தன் கருத்ததைச்சொல்லக்கேளீர்
வேலைகள்மிகுந்துவந்த விதமதையகற்றவேண்டி
சாலஞ்செய்யாமலந்த சதுர்முகன்றன்பால்யாமுங்
காலமதெடுத்துரைக்கக் கடுகவேசெல்வோம்வாரீர்.

### வசனம்

வாருங்களப்பா காலதூதர்களே உலகத்திற் ஓங்கும்மானிடர்களால் அக்ரமங்கள் மிகுதியும் விசேஷப்பட்டு நமக்கும் ஒழிவில்லாமல் துன்பத்தைதரும் வேலைகள் வாய்ந்திருக்கின்றமையால் ஜாலஞ்செய்யாமல் சதுர்முகனாகிய பிரமனிடஞ்சென்று நமது குறையைச் சொல்லுவோம் வாருங்கள் தூதர்களே.

### இயமன் பிரமனைப்பணிந்து-கூறும்கவி

சதுர்முகதேவாவோது சத்தியலோகவாசா
மதுரவாணியின்சமேதா மலரடிபோற்றிபோற்றி.

### பிரமன்-இயமனுக்குச்சொல்-கவி

கதிரவன்மைந்தாவாழி காலதூதுவர்கள்சூழ
மதிமுகம்வாடிவந்த வகையெனக்கறிவிப்பாயே



### இயமன்சொல்லுந்தரு-இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்

#### பல்லவி

வேதனே நீயறியாச்சேதி யொன்றுமில்லை
மெய்யனே கேளுமையா

#### அநுபல்லவி

பூதலமதனிலே நீதிநெறிகளற்றுப்
போதையாற்றொழில்மிஞ்ச லாகையால்மனமஞ்ச வேத

#### சரணங்கள்

வஞ்சகமுஞ்சூதும் சஞ்சலமுந்தீதும்
வாதுகளுமிஞ்சியே லோகமதில்
பஞ்சபாதகத்திற் கஞ்சாமல்மானிடர்கள்
பயபக்தியில்லாவைபோகம்
என்சொல்லுவோந்தொழில் மிஞ்சவேநொந்திட்டோம்
கஞ்சனேயுன்பாதங் காணவேவந்திட்டோம் வேத

பூமியிலேமெத்த காமியர்க்கேகாலம்
புண்ணியமில்லாஜென்மம்
ஆமிதுபொய்யாதாமென்றுரைக்கவு
மதற்குஞ்சாட்சிசொல்லுங்கன்மம்
நேமம்நெறிங்கற்றி வைத்தோரைக்கண்டிக்க
வாமேஒருவனாலேயதைக் கண்டேன்தெண்டிக்க வேத

திருக்குகளுலகத்திலிருக்கவேண்டுமென்றால்
தேவனேயென்னை தள்ளிப்போடும்
வுருக்கமாய்நானுமே யிருக்கவேண்டுமென்றால்
வுலகில்சிலர்க்கு சொற்கந்தேடும்
பொருக்குமோவுலகங்கள் பூமியைப்படைத்ததுய்யா
அருக்கன்சேயனென்னையு மாதரித்திடுமெய்யா. வேத

### பிரமன்-இயமனுக்குச்சொல்-விருத்தம்

மரலியேயஞ்சவேண்டா மானிடர்தமக்குசொற்கம்
தரணியிலென்னாலாமோ தயாபரன்றனைப்பணிந்து
வரமதுதரவுனக்கும் வகைதேடிவருவேனிப்போ
பரமனார்பக்கலுக்கு பரிவுடனேகுவோமே.

### வசனம்

ஆ இறவிமைந்தனாகிய மறலியே நீயாதுக்கு மஞ்சவேண்டாம் பூமியில்வாழு மாந்தர்களுக்கு மோட்சசாம்பிராச்சியங்களைக் கொடுக்க என்னாற்றாமாமோ ஆதலால் தயாபரமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதியிடஞ் சென்று உனக்கு வேண்டியவரங்களைத் தரும்படியாய்ப்பணிந்து கேட்டுக்கொள்ளுவோம் வாருமப்பா எமராசனே.

### கைலாசபதியாகிய-பரமசிவன்வருகிற-பொதுவிருத்தம்

அரியயனமரர்சித்த ருருமுனிவோர்கள்போற்ற
வரிசிலைசூலம்வேலும் மான்மழுகரமிலங்க
கரியுயரரவமாட கங்கைசெஞ்சடையிலாட
பரிவுடன்விடையிலேறிப் பரமனும்வருகின்றாரே.



### ஈசன்வருகிறதரு-இ-ம்-ஆரபி-ஏகதாளம்

### பல்லவி

ஈசன்வந்தாரே கைலாசவாசன்-வந்தாரே

### அநுபல்லவி

மாசிலாதவுமை வாமத்திலொளிர
மன்னனுந்தேவாதி மாதவத்தோர்களும்
தேசுலவுங்கருட காந்தர்வசித்தர்கள்
திவ்யவித்தியாதாரம் புகழ்ந்தேத்திட. ஈசன்



### சரணங்கள்

மாமறைகளெங்குமோங்க கணங்கள்
தூயமணிகுடைகளைத்தாங்க
சாமரைகளரம்பையர்கள்வீச தங்களிருடியர்புகழ்பேச
காமனைக்கண்ணாலெரித்தமஹேச கழலிணைகாளுந் தொழுவோர்
விஸ்வாச (ஈசன்)

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய உமையேசன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடகாந்தர்வர் சித்வித்யாதரர் யாவரும் புடைசூழ மாதவத்தோர்கள் முடிதாழ சிவகணங்கள் நவரத்னகசிதமாகிய குடைகளேந்த அரம்பையராதி யப்சரஸ்திரீகள் ஆலவட்டந் தாலவட்டமுதலிய சாமரைகள் வீசக்கொலுவீற்றிருக்கையில் மரலியாகிய யமனும் மலரோனென்னும் பிரமதேவனுந் தங்கள்மனதிலுள்ள குறையைப் பரமசிவனைப் பணிந்துரைக்கின்ற விதங்காண்க.

### தரு-இ-ம் உசேனி தாளம்-ரூபகம்

### கண்ணிகள்

சங்கரசிவகங்கைவேணிய ஓமரோஹரா
சாம்பசிவனேசரணமையனே

திங்களணியும்செஞ்சடைப்பரனே ஓமரோஹரா
செப்புதற்கருமான்மழுகரனே

வண்மைசேர் மண்ணுலகமதனிலே ஓமரோஹரா
வளர்ந்தபாபமறைந்ததுபுண்யம்

அண்ணலேயும தெண்ணமகற்றி ஓமரோஹரா
அக்ரமங்களுமிகுதியாச்சுதே

பஞ்சபாதகர் பாரிலோங்கியே ஓமரோஹரா
பாழுரசெயல் பாண்மையேசொலாய்

அஞ்சிநாமுமைத் தஞ்சமென்றுமே ஓமரோஹரா
அந்தகனவன் சிந்தைவாடுகிறான்

உற்றசேதியுன் சித்தமறியவே ஓமரோஹரா
வும்மிடம்வந்தோ முண்மையாகவே

பந்தியாகவே வெற்றிதந்திட ஓமரோஹரா
பாருங்கிருபை தாரும்நாதனே

இதுவுமது விருத்தம்

பூமியிலேகுலப்பழுது நேரலாலும்
பொய்சாட்சிசொல்லிகடன் கழிப்பதாலும்
காமிகளாலக்ரமங்கள் மிகுத்தலாலுங்
கடன்கொடுத்தோர்நாணமுற்றே யிருப்பதாலும்
நேமமுடன்நீதிநெறி பிசகலாலும்
நீதியில்லாவேழையர்கள் வாடலாலும்
ஆமிதுவேபரகதிக்கு வழியில்லாம
லந்தகனும்நொந்துவந்தா னறிகுவீரே.

வசனம்

கேளும் சர்வலோகசரண்யனாகிய சிவபெருமானே பூமியின் கண் ஒங்கும்மாக்களது வர்ணாஸ்ரமங்கள் பிரண்டிருப்பதாலும் அரசின் முன்னிலையில் சிலமானிடர் பொய்சாட்சிகள் சொல்லி தங்களது காலத்தைக் கழித்துவருவதாலும் தங்கள் தங்களுக்குரிய இல்லாளிருந்தும் மோகவிகாரத்தால் பரஸ்திரீ கமனஞ்செய்து அக்ரமிகுத்து நடப்பதாலும் தாங்கள் தேடியபொருளை வீணிற் செலவழித்து பிறர்பால்கெஞ்சி வாங்கியப்பொருளை கடனாகக் கொடுத்தவர்கள் கேட்குங்காலையில் அவர்களது மனநடுக்குற்று தலைகுனிந்திருக்கும் தன்மையினாலும் அவ்வர்ணாஸ்ரமத்திற் குரிய நீதியின்படி ஜெபதப ஓமவிரதங்களை அனுஷ்டிக்காத தன்மையினாலும் பொருட்குன்னியராகிய ஏழைகள் மிகுதியுந்தங்களது மனவாட்ட முற்றிருப்பதாலும் அன்னவர்கள் தென்றிசைத் தலைவனது ஆட்களாய் வருத்தத்தைக் கொடுத்து முத்திமோட்சத்தை யடையாமலிருக்கின்றார்கள் நாதனே.

சிவபெருமான் சொல்-விருத்தம்

மலரயன்மரவிகேளீர் வருத்தநீர்படவேவேண்டாம்
உலகெலாமன்பருக்கு முதலியுந்துஷ்டருக்கு
நலமுடன்தெண்டித் தென்னவர்பதம்யெனவேண்டி
இலகவேமனங்களித்தும் மிருப்பிடஞ்சேருவீரே.

வசனம்

கேளும் சிருஷ்டிக்குரிய பிர்மனாகவும் தெண்டனைக்குரிய அந்தகனாகவும் வயங்குந் தன்னியர்களே உலகத்தின்கண் கண்ணோங்கும் அன்பர்களுக்கு கருணைசெய்தும் துஷ்டர்களைச் சிஷ்டைசெய்தும் தென்னவனைப் பணியும்பொருட்டா யாவுஞ்செய்து களிப்பிக்கச்செய்யும் தன்மைநன்மை நம்மிடத்திலிருப்பதால் நீங்கள் யாதுக்கு மஞ்சாமல் உமதிருப்பிடம்போய் சேர்வீர்களப்பா.



பொது விருத்தம்

பகலவனெனவேதிவ்ய பணிகளுமலங்கரித்து
சகலருமதிசயிக்க சரிகைபட்டாடைமின்ன
தகதகவெனவேதண்டை சதங்கையுஞ்சிலம்பொலிக்க
ஜெகமெலாந்துதிக்கெங்கா தேவியும்வருகின்றாளே.

கெங்காபவானி-வருகிற தரு-இ-ம்

பல்லவி

கதிரொலிபுதமணிசித்த மதியொத்தகழகின்மிக்க
கெங்காபவானிவந்தாள்    பரமன்பக்கல்    கெங்

அநுபல்லவி

துதிபெற்றமாதர்கள்    வதனத்தாலுமிக்க
சோலைக்கிளிமொழி    வாலைக்குயிலென
சேலைக்கதிர்குண    சாலிவஜ்கரி    கதி

சரணங்கள்

சங்கரன்சடைதனில்    தங்குந்தயாபரியாள்
தையல்சிகாமணி    வந்தாள்
தங்கவளையல்கொஞ்சக்    கங்கணங்கரத்தாட
நாவுநற்பத    கோவைகனியிதழ
தேவரடியார்கள்    சிரமவிமோசனி    கதி

பச்சைக்குரும்பைக்கொங்கைகள்    யெங்கணுமேமின்ன
பதக்கம்பளப    ளென்னவே
வச்சிரக்கொந்தளவோலை    யுச்சிதமலாம்சொலிக்க
வாடைபரவிய    வாடைபரிமளம்
பேடைதிநநடை    ஜாடையாகவே    கதி

மாதர்கவரிவீச    வேதமுனிவர்பேச
மங்கையர்புடை    சூழவே
பாதச்சிலம்புமிஞ்ச    நாதகீதங்கள்மிஞ்ச
பாசத்துடன்மிகு    வாசமிகுந்திட
நேசத்துடன்சரு    வேசனைக்காண    கதி

### கெங்காபவானிசொல் விருத்தம்

விதிசிரமணிந்தகையா விடமுண்டநீலகண்டா
மதியணிசிவமேயுந்தன் மலரடிபோற்றிபோற்றி
அதிவிரைவாகவிந்த வமரர்சூழ்சபைக்கழைத்த
துதிபெரும்விதமெனக்குச் சுந்தரர்வருள்செய்வீரே.

### வசனம்

பிரமா கபாலத்தையேந்திய கரனே நீலகண்டமூர்த்தி மூன்ரும் பிறையைத் தரித்திலங்கும் பெம்மானே தேவரீரது உபயபாதாம்புயங்கள் போற்றிபோற்றி தேவர்முதலிய யாவரும் புடைசூழ்ந்திருக்கு மிச்சபையின்கண் அடியாளை அதிதீவிரமாய் வருவித்தகாரணம் யாதோவதனை திருவாய்மலர்ந்தருள வேண்டும் சுவாமி.

### கெங்காபவானிக்குப் பரமசிவன்சொல் விருத்தம்

கெங்கையரேநீவாழியுலகிற்பாபங்
களக்கயெமன்ருெழில் மிகுத்துவயனுக்கோத
பங்கயனும்வந்துறைக்க நமன்களிக்க
பாசமுடன்வரமளித்தே னதற்குநீயு
மங்களஞ்சேர்மறைகுலத்திற் செல்வியாகி
மானிடர்க்குவினையூட்டி மகிமைகாட்டி
பொங்கமுடன்தெண்டித்தாற் றுதிப்பார்நம்மைப்
புகழுமுண்டுபுவனத்திற் கேகுவாயே.

### வசனம்

கேளும் பெண்ணே கெங்காபவானியே உலகத்தில் வழங்கும் மானிடர்களால் அக்ரமங்களாகிய துற்செய்கைகள் மிகுந்து அதனுல் பாரம் அதிகரிக்க அக்குற்றமுடையவர்களைத் தெண்டிக்கும் பொருட்டாய் நியமித்திருக்கும் அந்தகனுகிய எமனுக்கு ஒழிவில்லாமல் தொழி லதிகப்பட்டிருப்பதால் அவன் பிரமனிடத்தில் முறையிட அப்பிரமன் என்னிடம் முறையிட்டபடியால் அத்துன்பமகலும்படியா யவனுக்கு அனுக்கிரகித்தேனுதலால் நீ அதன்பொருட்டாய் புவியின் கண்ணேங்கும் மங்களகரமாகிய மறையவர் குலச்செல்வியாய் ஜனித்து துன்மார்க்க முற்றவர்களுக்கு வினையைப்பூட்டி உனதுமகிமையைக் காட்டி சந்தோஷகரமாய் தெண்டிப்பாயாகில் அப்போது நம்மை யாவரும் புகழ்ந்து நன்மார்க்கத்தில் நடந்துவருவார்க ளாதலால் பூலோகத்திற் சேருவாய் பெண்ணே.



### கெங்காபவானிசொல்-தரு-இ-ம்-சங்கரா ரூபம்

#### கண்ணிகள்

நாதாநவநீதாயிதுநமக்கு    நல்லதல்லவேசொல்லும்
பேதபேதமுண்டோயென்னைப்    பிரியமனம்வருமோ
பிஞ்சகனேமனம்    சஞ்சலமாகவே
அஞ்சவேசெய்திடும்    வஞ்சகமேதோநாதா

### பரமசிவன்சொல்தரு-இ-ம்-அடாணு ரூபகம

#### கண்ணிகள்

சொன்னமொழிதவருமறு    திக்கமண்ணிலேருன்னை
வண்ணகுயிலேகீர்த்தி    வருமேநலந்தருமே
மண்டலத்திற்ஜென்மங்    கொண்டுயேநீயிரு
துண்டர்கடம்மையே    தெண்டனைசெய்யவும்

### கெங்காபவானிசொல்தரு-இ-ம்-சங்கரா-ரூபகம்

#### கண்ணிகள்

நலமோ இதற்கென்செய்வே    னுட்டிவிடர்கடாட்சிசுவாமி
உலகோரென்னைவைவாரையோ    வோதும்நவநீதா
உத்தமதேவனே    சித்தமும்வாடுதே
பத்திசேர்மறையவர்    புத்திரியாவது நம

### பரமசிவன்சொல்தரு-இ-ம்-அடாணு ரூபகம்

#### கண்ணிகள்

கண்டேயுந்தன்மகிமை கருத்தினிலன்புகிருத்தி
கொண்டாடுவோர்குறை தீரக்கோருகிருபைக்கண்பாரு
ஞற்றமேதுவடிவுத்தமியாளே
மெத்தவேநலம் பெற்றிடுவாய்நீ.    கண்

### கெங்காபவானிசொல்-விருத்தம்

முப்புரமெரித்தநாதா முக்கணுஞானமூர்த்தி
யொப்பிலாப்பரனேயிந்த வொளிபெருஞ்சடையினின்று
மெப்படிநீங்கினு மிருந்துபூலோகந்தன்னில்
தப்புரையின்றிவாழத் தையலாளறிகிலேனே,

வசனம்

ஓ திரிபுரதகனா திருநேத்திரதாரியாய் விளங்கும் ஞானமூர்த்தி ஒப்பொருவரில்லாத பரமே உமது வொளிபொருந்திய சடாடவியி னின்றும் அடியாள் எப்படிபிரிந்து பூலோகத்தில் ஜெனித்து யாதொரு குற்றமுமின்றி வாழுவரிவேனோ சுவாமி.

பரமசிவன் கெங்காபவானிக்குச்சொல்தரு-இ-ம்-சஹானா

கண்ணிகள்

கவலையேனுனக்குபுவனரக்ஷகியெனும் கங்கைநாயகிநீயே
கருதருமுலகினில்பெருமைப்பெற்றுநீ களித்திங்கிருப்பாயே
கனமாகவே தினமாமறை
யினமாகுவதனமேவிய கவலை

கெங்காபவானிசொல்தரு-இ-ம்-பியாகடை-ரூபகம்

கண்ணிகள்

உம்மைப்பிரிந்திருக்கவசமோ வுமையாள்பாகா
வோதுமறைகுலத்தி லுதிக்கவுநீதியோ
வுரகபணிகரனேமழுகரா
ஓதுந்தற்பரனே பராபரா உம்மை

பரமசிவன்சொல்தரு-இ-ம்-சஹானா-ரூபகம்

கண்ணிகள்

மண்ணும்விண்ணும் புண்ணியதீர்த்தமானநாயகி
வளருங்கீர்த்தியதனைத் தளருவதேன்வெண்டாம்
மகிமைசெலுத்துவாய் மதியினாலுனை
பதியின்மானிடர் கதியைச்சேரவே மண்ணு

கெங்காபவானிசொல்தரு-இ-ம் பியாகடை-ரூபகம்

கண்ணிகள்

இரும்புவியிற்றெய்வங்க ளிருக்கப்பலபலவா
யென்னையெவர்துதிப்பா ரேகநாயகனேசொல்
எந்தன்வல்லமை யேகநாதனே
ஈசனேவிசுவாச னேசனே இரும்

பரமசிவன் கெங்காபவானிக்குச்சொல் விருத்தம்

வேதியன்மனவியாரும் விரதமுற்றிருப்பாள்நீபோய்ச்
சோதிசேர்செல்வியாகத் தோன்றியேவளர்ந்துமீண்டு



மாதிமாலருளப்பெற்றே யடாவினையகலத்தேவர்
வாதினாலவர்களும்மை வசமாக்கிபுகழ்கொள்வாயே.

வசனம்

கேளும்பெண்ணே கெங்காபவானியே பூமியின்கண் வேதியர் மரபில்வுதித்த வேதநாயகியென்னுமோர் பார்ப்பிணியானவள் குழந் தையில்லாத தன்மையால் கெங்கைக்கரையில் விரதமனுஷ்டித்து வருகிறாள் நீபோய் அதிரூபலாவண்யமுடைய பெண்குழந்தை வடிவமாய் அக்கெங்கையிற்றோன்றி மிதப்பாயாகில் அன்னவ ளுன்னை கண்டு சந்தோஷங்கொண்டு எடுத்துக் கொண்டுபோய் வளர்த்து வருங்காலையில் நீயவளின்றும்மீண்டு வடவேங்கடத் துறையும் வள்ளலாகிய மாயவனைப் பணிந்து அவரால்வேண்டிய வரங்களைப் பெற்று லோகத்தில் வினைச்சூரிய தெய்வங்களோடு வாத மிட்டு ஜெயித்து உன்வசப்படுத்தி பூமியெங்கும் புகழ்நாட்டி யாவ ருக்கு மருட்செய்து அக்ரமங்களைப்போக்கி வருவாய் பெண்ணே.

கெங்காபவானிசொல் விருத்தம்

என்னயான்செய்வேனையோ ஈசனார்விடையளிக்க
உன்னிதவார்த்தையாலே உருகியேயெனதுநெஞ்சம்
துன்னியமேனிவாடிச் சோருதென்னுடலமெல்லாம்
அன்னவூர்தியமைப்போ வருஞ்சடைநீங்கினேனே.

வசனம்

இனி யான் யென்செய்வேனையா ஜகதீசனாகிய எனதுநாயகன் செய்த கட்டளையாகிய உன்னித வார்த்தையைக் கேட்ட எனது நெஞ்சமானதுவுருகி பிரகாசம்பொருந்திய மேனிபுங்குலைந்து உட லுஞ் சோர்ந்து தடிக்கின்றதே இவற்றை யோசிக்குங்கால் அன்ன வாகனனாகிய பிரமன் விதித்தவையோ சடாடவியைவிட்டு நீங்க லாகினேன் என்செய்வேன் அந்தோ.

இதுவுமது தரு-இ-ம்-வசந்தா-அடதாளம்

பல்லவி

என்னஜென்மமெடுப்பேன் பூமியின்கண்ணில்
எப்படிசகித்திருப்பேன்

அநுபல்லவி

அன்னமேறும்பிரமதேவனமைத்ததையோ
வாமபாசமுடனே யீசன்செஞ்சடையினில்
கூசாமலிருந்தேனே மோசம்வந்ததேயிப்போ என்

சரணங்கள்

எத்தனைபேரென்னை வைவாரோ வினையாக
மிகல்வினைப்பதால்புத்தி செய்வாரோ
பத்தினிவேதநாயகி பெற்றமகளென்றும்
பாவியவளைவிட்டுத் தாவிவினையைத்தொட்டு
மேவிமானிடர்யாரு தாவிபதரிடவே என்

திங்களணியுங்கால காலனே இனியென்
செய்வேன்மங்களகுண லோலனே
கங்கைப்பிணிமென்றென்னைக் காசினியோரேசவைத்தாய்
காருமுமதுக்குபை பாரும்பராபரனே
சீரும்புகழுங்கொள்ளத் தாரும்வரமெனக்கு என்

முந்திபிப்படியோர்கால் நொந்தேனேசுரமுல்
எந்தன்உடலம்வாடி வந்தேனே
அந்தவிதமாச்சுதையோ வகிலலோகந்துதிக்க
வாராய்த்துயரமுடன் பாரோர்வினையறவே
வாருக்கவலையுடன் தாரார்புகழ்தரவே என்

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் கெங்காதேவி புலம்பிக்கொண்டிருக்கையில் திருப்பதி என்னும் தலத்தில் வாசஞ் செய்துக்கொண்டிருக்கும் மறைகுலச்சிகாமணியாகிய பூசுரர்வேங் கடத்தானை தெரிசித்து மனைக்குவருகின்ற விதங்காண்க.

மறையவர்கள் வருகிற தரு இ-ம்-சஹானு-ஆதி

பல்லவி

வேதாசரசன்பெற்றே நீதியில்மனம்வைத்த
வேதசிகாமணிவந்தார் மனைக்கன்பாக வேத

அநுபல்லவி

ஆதிமலரவிந்த பாதமதைத்துதித்து
வாசையாகவேகரம் வீசிநடைநடந்து வேத

சரணங்கள்

முத்துக்குல்லாவுந்தரித்தே வெற்றிமொழிகள்பேசி
மோகனமாலைக ளாடவே
கைத்தலந்தன்னிலே கடகம்பளபளென்ன
வித்தையிலுயர்ந்திடு வேதவேதியர்மெச்ச வேத



பட்டநாமந்துலங்கக் கட்டுங்கலையிலங்க
பதக்கம்பளப ளென்னவே
வட்டக்குடைபிடித்தே வாடைக்கமக்மென்ன
அட்டியில்லாமலே யழகாய்நடைநடந்து வேத

உலகெலாம்பணிந்தேத்தும் தலைவன்மீதுமிக
வோதம்வேதங்கள் பேசியே
பலகலைகளுமாய்ந்து நிலைபிசகாத்தீரன்
நலஞ்சேர்மணமுலவு நறுமலர்களைச்சூடி வேத

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் விதிகுலசிகாமணி யாகிய பிராமணன் தனது மனைக்கு வருவதைக்கண்டு அவர் தேவி யாகிய வேதநாயகி வருகிற விதங்காண்க.

திபதை

அருமறைகுலத்துதித்த யழகியவதனவஞ்சி
பெருமதிமுகமிலங்கப் பின்னலார்சடையுங்குப்பி
திருமணிபணிகளாடத் தேன்மொழியணையமின்னாள்
நறுமணம்வீசுவேத நாயகிவருகின்றாளே.

வேதநாயகி வருகிற தரு சஹானு-ஆதி

பல்லவி

சீதரனருளப்பெற்ற சேல்நிகர்விழியாளென்னும்
வேதநாயகிவந்தாள் நாதனைக்காணவேத சீத

அநுபல்லவி

ஓதும்பலமணிக ளொளிரவேஜடையிற்
சீதமலர்க்கதம்பந் திகழ்ந்திடபுவிமீது சீத

சரணங்கள்

பாடகந்தண்டைகொலுசு பதக்கம்பளபளென்ன
நாடெலாம்பரவிய நாரணனெனவேதுன்ன சீத

சிற்றிடைபட்டுடுத்திச் செம்பொன்னொட்டியாணமிட்டே
முத்துமாலைகளணிந்தோ மூதுணர்ந்தோரோதிய சீத

பைங்கொடிமார்புடைசூழ பண்புலோரெவருந்தாழ
விந்தைசேர்நடைநடந்தே வேங்கடத்தானெனவோது சீத

வேதநாயகிசொல் விருத்தம்

வந்தனம்பிராணநாதா வயதருபதுவுமாச்சு
குந்தகமில்லைசெல்வங் குறைவில்லையிதுவரைக்கும்
சந்ததியற்றிடாத தன்மையாற்றயங்கிவாடிச்
சிந்தையுமுருகுதையோ தேவனேயென்செய்வேனே.

வசனம்

சரணம் சரணமையா பிராணநாயகா நமக்காறல் வயது அறு பதிற்கு மேலாகியும் இதுவரையில் புத்திரபாக்கியமில்லாமற் மற்ற யிதரபாக்கியங்களால் கதியுண்டாமோ என்செய்வேன் எனது பிராணவல்லபா.

தரு-இ-ம்-வினவிடைக்கண்ணிகள்

என்னபாவஞ்செய்துயிரந்தோமே அடிபெண்ணேகண்ணே
யிந்தனுள்சந்ததியுமில்லையே
அன்னாவூர்விதிதன்னைவெல்லவே என்மானேதேனே
யாராலாகுமோவோதுவாய் அடிபெண்ணேகண்ணே யா

விடை-பிள்ளையில்லாப்பாவியாகியே யென்பிராணநாதா
பெருமையிழந்தேனேநாயகா
வெள்ளலார்செயலோவிது வுள்ளம்வாடினேனுமக்கு
லந்தபாவியெந்தன்விதியோ என்பிராணநாதா தந்த

வினு-கோவையாளேவாதையேதுனக்கு யென்பெண்ணேகண்ணே
குலந்தழைக்க நலமுமில்லையே
ஆதிமாயன்பாதம்போற்றி யன்பர்கட்குதவிசெய்து
மருந்தவமிழைத்ததுமில்லையேயடி என்பெண்ணேகண்ணே ம

விடை-பட்டணமெங்குங்குழந்தையை யென்பிராணநாதா
பார்த்துகண்கள் பூர்த்துகொந்தேனே
கட்டளைபிரமன் செய்தவமோவல்வினையோ
காசிமலடியானேனே என்பிராணநாதா காசி

மறையவன் சொல் விருத்தம்

பொருந்தியவெவ்வனத்திற் புத்திரனுதிக்குங்காலம்
வருந்திளுமினிச்சந்தானம் வருகுமோகாலந்தானே
யிருந்துநீமுத்தந்தன்னி லெழில்மிகுமைந்தராசை
மருந்துநாம்வாழ்நாளன்னை மகிழ்வுடன்போக்குவோமே.



வசனம்

கேளாயெனது பிராணநாயகியே உலகத்திலோங்கு மானிடர் களுக்குரிய காலங்களில் எவ்வனகாலத்தில் புத்திரபாக்கியங்கைக் கூடுமேயன்றி மூப்பில் கூடமாட்டாது அதுபோல நமது எவ்வனத் தில் எத்தனை நோன்புகளிழைத்தும் அறைமுறைவழாது நடத்துங் கிடைக்கப்போகிறதா ஆதலால் அவ்வெண்ணத்தை மறந்து முத்தத்தி லிருந்து மகிழ்ச்சியோடும் நமது வாழ்நாளைக்கழிப்போம் பெண்ணே.

பொது விருத்தம்

மங்கையும்விசனமுற்று மறுமொழியுரைத்திடாமல்
நங்கையும்ஸ்நானஞ்செய்து நதிகரைதன்னில்வந்தே
கங்கையின்கரையினின்று கால்நாட்டின்புபூட்டி
குங்குமக்களபம்பூசிக் குரித்துமேதுதிசெய்வாளே.

வசனம்

அகோதெப்படி யென்றால் வேதநாயகியெனும் பார்ப்பினி தனது நாயகனுரைத்த மொழிக்குபதில் யாதும் பேசாது தினந் தோரும் கங்கைநீராடி குங்கும கதம்பங்களணிந்து அக்கெங்கா பவானியைத் தியானித்துக் கால்நாட்டி அன்புபூட்டி புத்திரபாக்கி யம் கிடைக்கும்படியாய் துதிசெய்யும் விதங்காண்க.

வேதநாயகி கெங்காபவானியைத் துதிசெய்யும்தரு-இ-ம்-துக்கடா கண்ணிகள்

சிந்தையிலன்பாகவந்தேஸ்நானம் செய்துகொண்டேன்திவ்ய
கந்தமிகுத்திடும் நந்தவனமதைக்கண்டேன்
மல்லிகைமுல்லை மருவிருவாட்சிகள்புன்னைபஞ்ச
வில்வமுங்கோங்குடன் வேண்டியமாமலர்த்தன்னை
பரிவாகக்கண்டேந்திக்கரையிற் கல்லைநாட்டிஒதும்
நெரியாகப்பூசைகள்செய்தேன் மனதின்பம்பூட்டி
ஈசன்சடையிலிருந்தாடுங் கெங்கையென்தாயே ஏழைக்
கெழில்சேரும்புத்திர பாக்கியந்தருவாயே
பாரெங்கும்புகழ்ந்திடும் பாபவிமோசனிதாயே
சீரோங்குமுலகத்தில் ஜீவதயாபரிநீயே

இதுவுமது-தேவாரப்பண்

சங்கரன்சடையில்வாழ்ந்த தயாபரியானநீயே
எங்குமேந்திகளாகு யிருப்பவளுலகில்நீயே

கங்கையேசர்வஜீவ ரட்சகியானநீயே
என்குறைதவிற்பதற்கே யின்பம்வைத்தருள்வாய்போற்றி
நீரில்லாவுலகமேது நீயிலாக்கதிவேறேது
மாறிலாச்செல்வமேது வையகந்தழைப்பதேது
ஆறில்லாவுலகுக்கெல்லா மழகெதுவடியாளுக்கு
பேரில்லாக்குறையகற்றும் பேதையுன்பாதம்போற்றி

பொதுவிருத்தம்

நிலத்தினிற்குரியதெய்வம் நீயெனநிதம்பூசிக்க
நலத்தினில்மிகுந்தயீசன் நல்லுரையாலேகெங்கை
சலத்தினில்மிதந்துவந்த சந்தானமதனைக்கண்டு
குலத்தினில்மிகுத்தமாது குழந்தையையெடுத்துச்செல்வாள்

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி என்னும் பார்ப்பினியானவள் தினந்தோறும் கெங்கையில் ஜலக்கமாடிக் கந்தபுஷ்ப பரிமளங்களால் கெங்காதேவியை புவனத்திற்குரிய தெய்வமுன்னையன்றி வேறில்லையாதலால் ஏழை யெனதுமனக்குறையைத் தவிர்த்தாளவேண்டுமென்று பூசித்துவருங்காலையில் சலத்தின்மிகுந்த சந்திரஜடாதர மூர்த்தியினது விடையேற்ற கெங்காதேவியானவள் குழந்தைவடிவமாய் அந்த நதியில் மிதந்து வருவதைக்கண்டு அதியாவலோடும் அக்குழந்தையை எடுத்தணைத்துக் கொண்டு கூறுவாள்.

வேதநாயகிசொல்தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதி

பல்லவி

என்னவடிவமிதுவோ நல்ல
மெழின்மிகுத்தொளிதரவிதனுறுசுந்தரி யோ என்

அநுபல்லவி

கன்னலம்தன்ரதியோ காங்கேயனார்சதியே
கங்கையோமலர் நங்கையேயிவ்வுரு
பொங்கமுடனேவந்து யென்குறைதீர்த்தவள் என்

பர்வதராஜன்சொல்லினையே திசைசூழுமிப்
பாரெங்கனுந்துதிக்கச்சீருடன் வந்தவள்ளியன்மரகதவல்லியோ
காகமலங்கள்போலும் கதிரோனுதயம்போலும்
காணுதேபலவிதம் வேணதுண்டதிசயம் என்



கெங்கைகடாட்சமிதுவோ பேதையின்குறை
கேட்டானந்தங் கொண்டெந்த வாட்டமாக வந்த கெம்பீரமனவுருவ
செங்கமலத்தையொத்த சிவந்தமெய்யினழகும்
செகமெலாந்துதித்திட மகிமையைமதித்திடப்
புகலுதற்கரிதான பகிரதிதானோ என்

காணாதகாட்சிகண்டேனே ஏழையின்பங்கில்
கங்கையினுற்றிலங்குங்கமல வல்லியைப்பெற்றேற
கருதருகாட்சி கொண்டேனே
தோணுதுந்தோணுதே சுந்தரிதன்னையிங்கே
சுத்தமுடனேயிதைப் பெற்றேயென்றிதவர்கள்
யித்தலந்தன்னிலுள்ள வுத்தராரோ என்

இதுவுமதுவிருத்தம்

மாசிலாக்கெங்கையின் னருளினாலே
மகவைக்கண்டோடிய வழியினில்லாத
ஆசையினார்குழவிதனை யெடுத்துக்கொண்டே
யன்பாகமனைநாடிக் கணவன்பக்கல்
நேசமுடனடிபணிந்தேன் பிராணநாதா
நெடுங்காலநாமடைந்த துன்பந்தீர
வீசுமணிசெல்விதனை கெங்கைதந்தாள்
வேதகுலநாயகனே விரும்புவீரே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி யென்னும் பார்ப்பினியானவள் விரதமநுஷ்டித்து வருநாளில் குற்றமற்ற கெங்காபவானியி னருளால் கோடிசந்திர பிம்பம்போன்ற ஒரு பெண்குழந்தை ஜலத்தில் மிதந்துவந்து கரையிலொதுக்கக் கண்டு அதிக யாவலோடுமோடி யக்குழந்தையை எடுத்து மார்போடு தழுவிக்கொண்டவளாய்த் தனது மனைக்குவந்து பிரமகுலோத்துங்கனாகிய நாயகனது பாதகமலங்களைப் பணிந்து ஓ பிராணவல்லபா நெடுங்காலம் நாமடைந்திருந்த துன்பந்தீரும் பொருட்டாய் குருமணிபோ லிலங்குமோர் பெண்குழந்தையைத் தந்தாளிந்தாரும் பாருமென்று புருடனிடங் கொடுத்தாள்.

வினவிடைத்தரு-இ-ம்

பல்லவி

ஏதடிநீயிந்த சூதுகள்பேசுறாய்
யிதுமெத்தநலமல்லபோடி

### அநுபல்லவி

காதலாகவெந்த மாதர்கள்பிள்ளையைக்
கன்னங்களவுசெய்து வந்தாயோ
பாதகியிதனாலே தீதுகள்நேருமே
பயங்கொண்டேநீமெத்த நயங்கொண்டுபேசாதே ஏத

### சரணங்கள்

உள்ளநாளுமெந்த னுள்ளத்தைநீகண்டு
வொருமித்தேமனது விட்டாயோ
தள்ளியகாலமெல்லாங் கள்ளஞ்செய்துவந்த
சங்கதியேதென்று கண்டாயோ
தென்னுமிவ்வுலகத்தில் பிள்ளைகளைத்திருடும்
நீரொருவராருண் டுலகத்தில் உள்

தண்ணிமீதுபிள்ளை நின்னுமிதக்குமோ
சங்கதிநீசொல்வ தேது
உண்ணும்பெரியோரைக் கொண்ணுவிடுந்தண்ணி
வுரைக்கும்வசனமிது சூது
யெண்ணிப்பாராமலே யேன்வீணாய்பேசுறாய்
வண்ணமறியாமல் வந்துநீகூவுறாய் தண்

### விடை

விந்தைதடாகத்தில் வந்துமிதந்ததே
மெய்யென்றேயென்சொல்லை நம்பும்
வந்தவகைகண்டு சிந்தைமிகக்கொண்டு
வைத்தேனேநான்மெத்த அன்பும்
அந்ததடாகத்தி லாருமில்லையப்போ
சுந்தரியைக்கொண்டு வந்தேநானிப்போ விந்

### வினா

எப்படியொப்பலாஞ் செப்பியமொழி
யெங்கேயாகிலுஞ்சொல்லிப் பாரும்
செப்பமிலாவிந்த வொப்பிலாபாதகி
தேசத்தோர்காணாத நேரம்
கப்பியவாடையின் கந்தமணக்குதே
யெப்படியோமன தெண்ணிநினைக்குதே எப்



### விடை

கட்டியபாவாடை பொட்டுங்கழுத்திலே
காணாதகாட்சியுங் கண்டேன்
வெட்டியமாமரம் போலவேனாப்போ
விழுந்துதண்டஞ்செய்துக் கொண்டேன்
அட்டியில்லாமலே ஓடியெடுத்தேனே
மட்டில்லாதமுத்தம் நாடிகொடுத்தேனே கட்

### வினா

ஆர்பெற்றபிள்ளையோ நேர்பெற்றிருந்திட
வதற்குகாலபலமு முண்டு
சீர்பெற்றிருந்திட நேர்பெற்றதுன்கையால்
சிந்தைகளிப்பாகக் கொண்டு
ஆர்பேற்றபிள்ளையா லெவ்விதநேருமோ
தார்பெற்றிடுவேன் துன்பங்கள்சாருமே ஆர்

### விடை

பேதகமெண்ணியே வாதுகள்பேசுநீர்
பிள்ளைக்கும்வில்லங்க முண்டோ
பாதகியென்றாலும் பிள்ளையைக்கண்டால்
பரிவுசொல்லாதவ ருண்டோ
நாதனேநீர்விடை தாரும்வளர்க்கவே
பேதைதானென்னிட வுள்ளங்களிக்கவே பேத

### மறையவன் சொல்-கொச்சகம்

வேதகுலநாயகியே மெய்யொளிவுங்கையழகும்
பாதவிரல்மோதிரமும் பட்டாடைபொட்டழகும்
சோதிமதிபொன்முகமுந் தொல்லுலகோர்பிள்ளையல்ல
பேதமில்லாக்கெங்கையம்மன் பேரளித்தேநீர்வளர்ப்பாய்.

### வசனம்

வாரும் எனது பிராணநாயகியே நமக்கு கிடைத்த குழந்தை பேச்சையுஞ் சந்திரபிம்பம்போலிலகும் முகாரவிந்தமும் பாதவிரலி லணிந்திராநின்ற மோதிரங்களினழகும் இடையில் உடுத்திருக்கும் பட்டாடையினழகும் சிரோருகம் போன்ற கரங்களினழகும் நோக்குமிடத்தில் இவ்வுலக வாசிகளுக்குரிய பிள்ளை யல்லபோற் றோணப்பட்டிருக்கிற தாகையால் யாதும் பேதகமில்லாமல் இக்

குழந்தைக்கு கெங்கையம்மனென்று நாமகரணஞ் செய்தேன் சந்துருஷ்டியோடும் வளர்த்து வருவாய் பெண்ணே.

வேதநாயகிசொல் விருத்தம்

மறைகுலங்களீடேறவந்த கெங்கையம்மனுக்கும்
புரவலர்கள்கொண்டாட பொற்பணிகளலங்கரித்தே
திரைகடலோர்மெச்சிடவே சீராட்டிதாலாட்டி
நிறையமுதூ தூட்டி னேசமுடனே வளர்ப்பேன்

வசனம்

கேளும் எனது பிராணநாயகா வேதகுலமீடேறும் படியாய் எனக்குக் கிடைத்த கெங்கையம்மனை இராஜராஜாக்கள் கொண்டாடும்படியாய் யாவரும் மெச்சத்தக்க பொற்பணிகளாலலங்கிர்தஞ்செய்து சீராட்டித் தாலாட்டி அமுதூட்டி மிகப்பரிவோடும் வளர்த்துவருவேன் நாதனே.

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய உமாமகேசன் சடாடவியில்விளங்கும் கங்காதேவியானவள் வேதநாயகியம்மனிடம் நாளொருமேனியுமாய் வளர்ந்து ஐந்தாவது வயதானபிறகு தனக்குச் சமரசமாகிய அசலாத்துப் பெண்களுடன்கூடி விளையாட்டுப்பூசல் செய்துவருகிற விதங்காண்க.

இதுவுமது விருத்தம்

சந்திரச்சூரியப்பிறைபாணியிலங்கத்தனி முத்துசுட்டிகளாட
கம்பீரமாய்செம்பொற்சரங்கள் ராக்கடியுஞ்சடைபின்னல்குப்பிபு
சுந்திரமிலங்குந்துய்யவாரங்கள் துலங்கியகங்கணகடகஞ் [குலுங்க
சோதியின்மிகுத்தவறைமணி கிண்கிணிதுலங்கியரத்னமூக்குத்தி
கந்தமும்பூசியவிழியிலஞ்சனமுங்காலினிற்கொலுசுதண்டைகளும்
கனகபட்டாடைஒட்டியாணமுமிருக்கிகதிரொளிபோல்மிகஜொலிக்க
அந்தணர்குலங்கடழைத்திடவந்தாளயல்வீட்டுப்பிள்ளைகள்சூழ
வழகுடன்தெருவில்விளையாடகங்கையம்மன்வந்துதோன்றினளே.

கெங்காபவானி-வருகிறதரு-இ-ம்அபரூபகம்

பல்லவி

அகிலமெலாந்துதிக்கு மகிமைசெலுத்துங்கெங்கை
யம்மனிதோ வந்தாள்



அநுபல்லவி

திகில்படப்பகைவர்கள் மிகவுக்ரபார்வையுடன்
சிலசிலமுனிவரும் பலபலமனிதரும்
கலமுடன் துதிசெய்யக் கலகலவென்றிந்த அகி

சரணங்கள்

சீரூர்பணிகள்கொஞ்சப் பாரூர்பிணிகளஞ்ச
ஜெகத்துப்ரதாபி வந்தாள்
ஆருமெதிரில்லாத பேர்பெற்றமகிழ்பெற்ற
அண்டர்கண்டடி தெண்டமுஞ்செய்திட
தண்டயவண்டய வெண்டியளித்திட அகி

பட்டும்பட்டாடைமின்ன பொட்டும்பளபளென்ன
கதிர்மணிபணி துன்னவே
கிட்டுங்கொண்டைஜடையும் செங்கைக்கடகமாட
சீதளம்பெருகிய போதுகள்விசிடப்
பூதலத்தன்பர்கள் மாதவமோங்கிட அகி

வேதகன்னியர்கள் போதநெருங்கிடவே
விளையாட நடந்தாளே
வீதிவீதியிலுள்ள மாதர்கள்நயம்பேச
வீரியமாமலர் சூடியபரிமளம்
வுருகியபொன்னிற வொளிசெயும்ரூபி அகி

கெங்காபவானிசொல் விருத்தம்

தங்கைகளக்கமாரே சந்தோஷமாகக்கூடி
யெங்கையாகிலுமெல்லோரு மிச்சையின்படிநடந்தே
சிங்காரக்கொம்மிகொண்டாள் சிலநேரமாடிப்பாடிப்
பொங்கமாய்மனைக்குவந்து போஜனம்செய்குவோமே.

வசனம்

வாருங்களக்கமார்களே தங்கைமார்களே நாமனைவருஞ் சந்தோஷமாகக் கூடிக்கொண்டு தமது யிச்சையின்படி எங்காகிலுஞ் சவுக்கியமா யிருக்குமிடஞ் சேர்ந்து சிங்காரக்கொம்மி முதலிய விளையாட்டுகளை சிலநேரமாடிப்பாடி மனக்களிப்போடும் அவாளவா ளாத்திற் சேர்ந்து போசனஞ் செய்து சுகித்திருப்போம் வாருங்களம்மமார்களே.

கெங்கையம்மன்சொல்தரு-இ-ம்-பரல் ஆதி

கண்ணிகள்

என்னடியக்கமாரே யின்னந்தாமசமேண்டி
யெல்லோருங்கூடியிங்கே யிருந்துகொம்மியடிப்போம்
பொன்னனகங்கைமாரே போடுங்கொம்மிகள்பார்ப்போம்
போகாமல்நின்றுயிங்கே புகழ்ந்துகொம்மியடிப்போம்
பட்டாடையாடக்காலிற் பாடகங்களொலிக்க
பட்சமுடன்கணபதியைப் பணிந்துகொம்மியடிப்போம்
விட்டாடைவீசிவர விக்கினரைப்பாட
விதவிதமாய்ப்பாடி மிஞ்சிகொம்மியடிப்போம்
மாருதச்செல்வமளிக்கு மயிலேறும்பெருமாளின்
மலரடியைத்துதித்தே மகிழ்ந்துகொம்மியடிப்போம்
தீராதவினையைத்தீர்க்கும் திருவேங்கடமுடையான்
சீரடியைத்துதித்தே சேர்ந்துகொம்மியடிப்போம்
ஆசையுடன்மதுவருகி லொளிருங்கெங்கை
யவளுக்கோர்பதம்பாடி யடிப்போம்கொம்மி
ஈசன்சடாடவியிலிருந் தாடுகின்றகெங்கை
யிணையடியைப்பரவியிருந்து கொம்மியடிப்போம்.

இதுவுமது விருத்தம்

அந்தணர்குலத்திலோங்கு மழகுளதங்கைமாரே
வந்துநாம்நதியின்பக்கல் மனத்தினிலிச்சையான
விந்தைசேர்கொம்மித்தும்பி விளையாடியோய்ந்துநின்றோம்
சந்தோஷமாயெல்லோருஞ் ஜலத்தினிலாடுவோமே.

வசனம்

வாருங்கள் மறையவர் குலத்திலோங்கும் அக்கமாரேதங்கைமாரே நாமியாவரும் நமதிச்சையின்படியே கங்கைக்கரை யருகிற் சேர்ந்து விந்தைவிந்தைகளாகிய கொம்மிமுதலிய விளையாட்டுகளைச் செய்து மெய்சலித்து நின்றோம் இனிசந்தோஷமாய் ஜலத்திலிறங்கி விளையாடுவோம் வாருங்க ளம்மமார்களே.

இதுவுமது-தரு இ-ம் ரூபகம்

கண்ணிகள்

உத்தமிகாள்பத்தினிகா ளுயர்குலமாதேநீங்கள்
உள்ளாடையுடநீரில் வாருங்கடி
சத்தண்டைசிலம்பொலிக்குந் தங்கைமார்களேநீங்கள்



சலியாமவலேயோங்க கொம்மியடிப்போம்
ஆசையுள்ளபாசமன வம்புஜமேயடிநாம்
ஆரமாடத்தீரமாக கொம்மியடிப்போம்
நேசமுடன்விசித்திர நேர்த்தியுடனேநாமும்
நேராகக்கைதந்தே கொம்மியடிப்போம்
வஞ்சகமில்லாமலே வயங்குங்கன்னியர்களா
சஞ்சலமில்லாமலே சந்திரவதனிகளா
சம்பிரமுடன்பின்பமாக கொம்மியடிப்போம்
வரிசைகலையாமலே கொம்மியடிப்போம்
கங்கையிறுதிபாடி கன்னியர்களேநீங்கள்
உங்கள்வினைகள்தீரக் கொம்மியடியுங்கோள்
யெங்குமிப்படியாகப் பாருங்கடிநீங்கள்
யெங்களைஎன்றைக்குங் கோருங்கடி

பொது விருத்தம்

தண்ணீரிலாடும்போது சந்தோஷமாகக்கெங்கை
எண்ணியேமகிமைகாட்ட யின்பமாய்மூழ்கிநிற்க
கண்ணீர்கள்சிந்தப்பெண்கள் கெங்கையைக்காணுதாலே
குண்ணியேதாய்தந்தைக்கு கோள்சொல்லவருகின்றாரே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் யாவருஞ்சந்தோஷகரமாய் ஜலத்திலிறங்கி விளையாடும்போது கெங்கையம்மனவள் தனது மகிமையைக் காட்டும்பொருட்டு மனதி லெண்ணங்கொண்டவளாய் அந்நீரில்மூழ்கி யசைவற்றிருக்கும்போது மற்ற யாவருங்கண்டு திப்ரமைகொண்டு கண்ணீர் விடுத்தழுது அன்னவள் தாய்தந்தையரிடம் போய்ச் சொல்லுவோமென்று வருகின்ற விதங்காண்க.

அசலாத்துப்பெண்கள்சொல்தரு-இ-ம்-சாவேரி

கண்ணிகள்

| | |
|---|---|
| கன்னியரெல்லாருமிருக்க<br>கெங்கையம்மனெங்கையடி | அக்கமாரே-நல்ல<br>தங்கைமாரே |
| பின்னிடைந்துமூழ்கினளே<br>பின்வெழுந்துவரக்காணோம் | அக்கமாரே-யவள்<br>தங்கைமாரே |
| தாவித்தாவிநான்பிடிக்க<br>தண்ணியிலேபோய்மறைந்தாள் | அக்கமாரே-நடுத்<br>தங்கைமாரே |

ஆவிவாடுதென்னசெய்வோம் — அக்கமாரே-அவ
ளழுகையென்றுகாண்பமடி — தங்கைமாரே
ஓடியிந்தசேதிசொன்னால் — அக்கமாரே-அவர்
வுடனேவந்தெடுப்பாரடி — தங்கைமாரே
தேடியிந்தசேதிகூறத் — தாயுதந்தையு-மனத்
தேறியேபிழைப்பதேது — தங்கைமாரே
தங்காமலேயோடிச்சொல்வோம் — அக்கமாரே-நம்மேல்
தப்பிதங்கள்நேராவண்ணந் — தங்கைமாரே
கெங்கையம்மன்விழுந்தசேதி — அக்கமாரே-பதியிற்
கடுகியேபோய்சொல்வமடி — தங்கைமாரே

இதுவுமது-விருத்தம்

மிக்கதோரன்புண்டான வேதநாயகியேகேளாய்
அக்கரையோரம்நாங்க ளியாவருமாடும்போது
பக்குவமுடையவுந்தன் பாலகிகெங்கையம்மாள்
தக்கவேஜலத்தில்விழுந்தாள் தயங்கியேவந்தோமம்மா

வசனம்

கேளுமம்மா வேதநாயகியே பெறுதற்கரிய உனது புத்திரியுடன் நாங்களனைவரும் கூடிக்கொண்டு நதிக்கரையிடஞ் சென்று விளையாடிக் கொண்டிருக்கையில் அதிரூபலாவண்ய பக்குவத்தோடும் கூடியிருக்கும் கெங்கையம்மனனவள் ஜலத்திலிறங்கி மூழ்கியதைக்கண்டு நாங்களுமிரங்கித் தேடியுங்காணமற்றயங்கி உம்மிடஞ் சேதிசொல்ல வந்தோமம்மா.

பொதுவிருத்தம்

வரிசையாய்ப்பெண்கள்சொன்ன வாக்கியஞ்செவியில்விழ
அரிஅரியென்றுகூறி யப்பினளறைந்தாள்மார்பில்
வுருகியேமனதுவாடி வோவெனக்கதறிவிழுந்து
பரிவுடன்மகளேயென்று பரதவித்தழுகின்றளே.

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப் பிரகாரம் அசலாத்துப் பெண்கள் கூட்டமாய் கூடிவந்துரைத்தமொழியைக்கேட்ட வேதநாயகி யம்மனவள் அரிஅரியென்று செவியைப்புதைத்து வயற்றிலும் மார்பிலும் அரைந்துக்கொண்டு பூமியிற்சாய்ந்து வொன்றுந்தோன்றுதவளாய் கனலிடைமெழுகைப் போலுருகிக்கண்ணீர்



தாரைதாரையாய்ப்பெருக ஒவெனக்கதறி சகிக்கப்படாத துன்பத்தோடும் பரதவித்திருக்கும் விதங்காண்க.

வேதநாயகியம்மன்-புலம்பல்-தரு இ-ம்-நீலாம்புரி

கண்ணிகள்

ஐயோபாவிதெய்வமே செய்யாதகுறைசெய்து
அரும்பாவியாகினேனே — என்மகளே
மெய்யானசேதிசொல்லக் கைகால்நடுங்குதையோ
வீணகவாசைகொண்டே — னென்மகளே
மகளேயுந்தனைவேண்டி வெகுநாள்தவமிருந்தேன்
வாயில்மண்சாற்றினையோ — என்மகளே
ஜெகமெலாந்துதிசெய்யச் செல்வியுனைவளர்த்துச்
சீருங்குலையலாச்சே — என்மகளே
எப்போதென்னைக்கண்டு செப்புவாயம்மாவென்றே
யிறந்தாயோயென்னைவிட்டே — என்மகளே
தப்பாதமொழியுள்ள வொப்பொருவரில்லாத
தங்கச்சிரோன்மணியே — என்மகளே
பஞ்சரத்தினம்போலச் சஞ்சலந்தீர்க்கவந்த
பைங்கிளியேயென்செய்வே — என்மகளே
வஞ்சகம்செய்ததெய்வம் நெஞ்சில்நினைத்ததுவோ
வயிற்றிலெரியுதையோ — என்மகளே

இதுவுமது-விருத்தம்

என்னிடமகளேவையோ யெப்படிதுணிந்திருப்பேன்
வுன்னிடவடிவுக்கொப்பா யுலகினிலொருவர்காணேன்
மண்ணுமிவ்வுலகளித்த மாதாவென்றுனைபூசித்தேன்
அன்னையென்வாயில்மண்ணை யறைந்துநீமறைந்திட்டாயே.

வசனம்

ஆ ஆ எனதுசெல்வமே என்னைவிட்டுநீ எப்படி மறைந்தாய் ஐயோ கோடிசந்திர ரூபலாவண்யம் போன்ற உனது தனத்திற்கிணையானபெண்கள் எவ்வுலகினுங் கிடையாரே கடல்சூழ்ந்த யிவ்வுலகனைத்தக்குந் தாயாகவென்று உன்னையான் பணிந்துவந்த குறைதீர எனக்குச் செல்வியாகத்தோன்றியும் எனதுவாயில் மண்ணைப்போட்டு மறைந்தாயோ மகளே.

### இதுவுமது புலம்பல்-தரு-இ-ம்

#### கண்ணிகள்

ஐயோமகளேயெந்தன் மனதெப்படி துணிவே
னரும்பாவியாகினேன் ஓதெய்வமே

பொய்யாமுலகவாழ்வை மெய்யென்றுநம்பியுன்னை
பூசித்துவந்தனம்மா ஓதெய்வமே

கங்கைக்கறையிலுந்தன் காட்சியெனக்களித்தே
ககனத்தில்மறைந்தாயே ஓதெய்வமே

இங்கிதஞ்சேருனதுமழலைச் சொல்லைமண்மீது
யென்றுநான்கேட்பேனம்மா ஓதெய்வமே

கோடிசந்திரபிம்பம்போற் குலவுமதிமுகத்தை
கொடும்பாவியென்றுகாண்பேன் ஓதெய்வமே

மெய்யழகினைக்கண்டால் மேதினிமயங்குமோ
வினையேனினியென் செய்வேன் ஓதெய்வமே

உய்யவெனதுகுல முருவத்தைக்காட்டியிப்போ
வோடிமறைந்தனையோ ஓதெய்வமே

செய்யும்வகையறியேன் சிற்றிடையாயடியேன்
சிந்தைநைந்துமாண்டாயோ ஓதெய்வமே

#### பொது விருத்தம்

வேதநாயகியின்துக்கம் விப்பிரரெவருங்கண்டு
சீதமென்கங்கைநாடிச் செல்வியதனைகாணாது
யேதினிசெய்வோமென்று யேங்கியேமனைக்குவந்து
கோதிலாள்பாரில்வந்து கூறுவாளுண்மைதானே.

#### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி யம்மன் புலம்புவதைக்கண்ட அன்னவன் மனாளரும் சிலபிராமணர்களுங் கூடிக் கங்கைக்குச் சென்று நீரிலிறங்கி யெங்குந் தேடியுங் காணாது யினி யென்செய்வோமென்று யேங்கி மனைக்குவந்து குற்றமற்ற கோதையிடங் கூறுவார்.



### வினாவிடைத்தரு-இ-ம்

#### கண்ணிகள்

ஆசைக்கினியவளே பெண்ணரசே-நாமு
மரும்பாவியாகிவிட்டோம் பெண்ணரசே
மாசிலாத்தேவியரே பெண்ணரசே-இனி
வாடியழுதாலுண்டோ பெண்ணரசே

#### விடை

வரும்விதியறியேனெந்தன் மணவாளா-இந்த
வகைக்கினியென்னசெய்வேன் மணவாளா
தெருவில்விளையாடவந்தாள் மணவாளா-செல்வி
தெரியேனொளித்தவிதம் மணவாளா

#### வினா

அறியாதபாலகியாள் பெண்ணரசே-யொளித்த
தாரறிவார்மண்மீது பெண்ணரசே
தெரியாமல்வேதைகொண்டால் பெண்ணரசே-இதுவுந்
தெய்வச்செயலென்றேகளிப்பாய் பெண்ணரசே

#### விடை

களித்தெப்படியிருப்பேன் மணவாளா-எந்தன்
கண்ணாற்பிணத்தைக்காணாமல் மணவாளா
ஒளித்தமகளினாசை மணவாளா-எந்தன்
உயிர்போனாலொழியுமையா மணவாளா

#### வினா

ஐயோயிதுவிதியோ பெண்ணரசே-நமது
அருமைக்கிளிமகளை பெண்ணரசே
ஒய்யாரமாய்வளர்த்தோம் பெண்ணரசே-இனிமே
லொருக்காலுங்காண்பதுண்டோ பெண்ணரசே

#### விடை

காண்பதுண்டோவென்கிறீர் மணவாளா-அவளைக்
காட்டிக்கொடுக்கவிருந்தேன் மணவாளா
வீண்பழிவற்றுக்கொண்டோம் மணவாளா-இதுவும்
வேதன்விதித்ததமையோ மணவாளா

வினா

| | |
|---|---|
| உத்தமிபோனவகை | பெண்ணரசே-நாமும் |
| வொருவகையுங்காண்கிலோம் | பெண்ணரசே |
| செத்தவர்வருவதுண்டோ | பெண்ணரசே-உந்தன் |
| சிந்தைகளித்திருப்பாய் | பெண்ணரசே |

விடை

| | |
|---|---|
| சிந்தைகளித்திருப்பேனே | மணவாளா-எந்தன் |
| சித்திரத்தைக்காணாமல் | மணவாளா |
| இந்தஜலத்தில்விழ்ந்தே | மணவாளா-நானும் |
| இறப்பேனிதுஉண்மைகாண் | மணவாளா |

மறையவன்சொல் விருத்தம்

சீருலவும்பெண்ணேயிக் கதையைக்கேளாய்
  சேணுலகில்மருமகப்பால் மாமிதந்த
மோரோடுமோராக்க நீர்கலந்து
  முற்றுமதைவித்தவளும் பொருளைச்சேர்த்தே
தாராளமாய்ச்சொந்த பணத்தைக்கொண்டு
  கரியிடைபாடகஞ்செய்து காலிற்பூண
நீரோடுவாரு மோரோடுகாலும்
  நேர்ந்தகதைபோலெனக்கு நிகழ்ந்தினாயே.

வசனம்

கேளும்பெண்ணே பிராணநாயகியே ஒருதேசத்தில்கெட்டிக் காரியென்னும் ஓர்யிடைச்சியானவள் முத்தியென்னும் தனதுமரு மகளிடத்தில் நாள்தோறும் ஒருபணம் அரைபணத்திற்கு மோரை விலைபிட்டுக் கொடுத்து விற்பனைசெயது வரும்படியாக அனுப்பி வைக்கும்போது அவள் அப்பதிக்குமேற் யாலாகத் தோன்றும் ஆற்றுக்குப் புரம்பாய் விற்கப்போகிறவள் அந்தமோரிலே இடைக் கிடை ஜலத்தைக் கலந்துக்கொண்டு விற்பனைசெய்துவந்த பணத்தில் பாதியை மாமியார் வசத்திற்கொடுத்து மற்ற பாதிபணத்தை சிலவுசெய்யாமல் பத்திரப்படுத்திவைத்து முப்பதுரூபாய் சேர்ந்த வுடனே அதை மாமியாரிடத்தில் கொடுத்து மோரிற்றண்ணீர்கலந்த சங்கதியைச் சொல்ல மாமிகளித்துக் தன்னிடங் கொடுத்த ரூபாய் முப்பதுக்கும் பாடகஞ்செய்து மருமகளது காலுக்குத் தரிக்க அவள் அப்பாடகத்தோடும் மோர்விற்பனைசெய்து வருங் காலத்தில் ஓர்நாள் ஆற்றில்ஜலம் பூணமாய்ப் போகும்போது



இவளணிந்திருக்கும் பாடகம் விடுபட்டு ஆற்றில் நழுவி விட்டமை யினால் அக்கரையேறினபின்கண்டு விசனமுற்றவளாய் ஒற்றை பாடகத்தோடும் மாமியிடம் வந்துசொல்ல அதற்கவள் அடிமரு மகளே மோரோடேவந்தது காலோடேவந்தது நீரோடேவந்தது ஆரோடேபோயிற்று அதற்குநீ அழலாமோ வென்றுதேற்றினள் ஆதலால் அதுபோல் நீராலேவந்தபிள்ளை நீரோடுகலந்து விட்ட தென்று மனத்துணிவுகொண்டு ஸ்நானஞ்செய்துவிடுவாய் எனது உயிர்த்துணைபோன்ற பிராணநாயகியே.

கந்தார்த்தம்

வேதனையுற்றுவாடும் வேதநாயகியைத்தேற்றி
மாதர்கள்பிடித்துக்கொண்டு வந்துநம்ஜலத்தில்மூழ்கி
சூதகங்கழியக்கூந்தல் தூங்கிபின்னெழுந்துநோக்க
காதலாய்நடுஜலத்தில்
கங்கையும்நின்றாள் மகளைத்தாயும்பொங்கமாய்க்கண்டாள்
எங்கெங்குந்துதித்திட அங்கம்பளபளென்ன
திங்கண்முகமிலங்கத் தங்கச்சிரோன்மணி கங்கையு

வேதநாயகிசொல் விருத்தம்

வேதமொழிசெவிடனுக்கு வுரைத்தாப்போலும்
  விழியில்லான்கண்ட வியன்மணியைப்போலும்
ஆதவனைமுகிலினங்க ளடர்ந்தாப்போலும்
  அக்கினியைவெண்ணீரான் மறைத்தாற்போலும்
மாதவமேசொல்லியதால் வந்தவுந்தன்
  மகிமைதனையாரறிவார் மண்மேலோங்கும்
மாதரையாதரித்துக் காப்பாயுந்தன்
  பாதாரவிந்தமலர் போற்றிபோற்றி

வசனம்

ஆ ஆ உலகின்கண் ஓங்குஞ் செவிடர்களினது செவியில்வேத வாக்கியங்களை போதித்தவைபோலும் பிரவிக்குருடனாகை விருப்ப வனுக்கு உயர்ந்த ரத்தினங்கள் கிடைத்தவைபோலுஞ் சூரியனை அடர்ந்து மறைத்த மேகக்கூட்டங்களைப்போலும் நீர்பூத்தநெருப் பைப்போலும் மாதவமே யோர்வடிவாகிச் செல்வியைப் போல் வந்த உனதுமகிமை இவ்வுலகில்வாழும் மாந்தர்களா லறியக்கூடுமோ ஆதலால் பாதகராகிய வெங்களை யாட்கொள்ளும் படியாய் உனது உபயபாதாம்புயங்களுக்கு வந்தனம் வந்தனமம்மா.

இதுவுமது-தரு-இ-ம்

பல்லவி

தஞ்சமுமதுபாத மஞ்சலிசெய்தனம்
தாயேசரணமம்மா தஞ்ச

அநுபல்லவி

அஞ்சுகமேயடியரிருடியரிருவினைகலகல
வருட்காப்பாயோதுங் காலகாலந்தகி

சரணங்கள்

| | |
|---|---|
| நீலங்காதரி | நிறைந்தபஞ்சாட்சரி |
| நிகிலபுவனி | நீயே |
| சூலிபரஞ்சோதி | மகவையாகிவந்த |
| சுந்தரியுனையன்றி | வேறில்லையாதலால் தஞ்ச |
| உன்னைத்துதிப்பவர்க்கு | வோதும்வினைகளேது |
| வேய்நமோ | நாராயணி |
| பொன்னேகரபாலி | புகலுஞ்சடாட்சரி |
| புநிதசுரகமலம் | பொருந்திநிற்குஞ்செய்தேனே தஞ்ச |
| என்னமாயஞ்செய்தா | யுன்னைத்தேடியெல்லோரும் |
| யிரங்கினோம் | கருணாகரி |
| தன்னேரிலாப்பொருளா | யோங்குந்தயாபரியே |
| தற்காப்பதுன்பாரம் | பார்மிசையம்மணி தஞ்ச |

கெங்கையம்மன் வேதநாயகிக்குச்சொல்

அகவல்

தஞ்சமென்றுரைத்த தந்தையர்கேளே
அஞ்சவேண்டா மடியளின்வரலா
றியம்புவேன்கேளு மிப்புவியதர்மம்
பொய்யொடுசூதும் புகலொணாக்களவும்
மிஞ்சியிருப்பதால் மீதலமதனில்
காமிகளாலே காலனுக்கதிக
வேலைகள்மிஞ்சி விதியுடனுரைக்க
பாலைக்கிழத்தியின் பண்டனுமீசன்
தண்டனுரைக்கச் சதிர்கொளுமணாளன்
என்னிடமுரைத்த வெழிலுரைகொண்டே
கங்கைகாணுங்கள் கவலையைத்தீர்க்க



பொங்கமாய்வந்தேன் புத்திரியாகி
இனிப்பூமியிலெங்கும் நிறைந்தே
தனியாய்கைகட்டி தண்டித்துதுஷ்டரை
அன்பறைக்காத்து வடையவேசொர்க்கம்
இன்பமாய்த்தந்து யேமனுக்களிக்கச்
செய்திடவந்த சேயிதம்மா
தெய்வமாயென்னைச் சிந்தித்துவந்தால்
ஒவ்வொருகால மூங்கள்முன்வருவேன்
செவ்வையாய்நீங்கள் சிறப்புடன்வாழ்வீர்
நற்கதியடைய நல்வரந்தருவேன்
மைக்குழல்தாயே மனைக்கேகுவாயே.

பொது விருத்தம்

வரம்பெற்றதந்தைதாயு மலரடிப்போற்றிசெய்தே
வரம்பெற்றுமனையைநாடி யுளமகிழ்ந்திருக்கும்போது
தரம்பெற்றுகொள்ளவேண்டித் திருமலைவெங்கடேசன்
நிரம்பெற்றசரணமுன்னி நிகரிலாத்தபஞ்செய்வாளே.

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனிடத்தில் பெறுதற்கரிய வரங்களைப்பெற்ற வேதநாயகி யம்மனும் அவர் மணாளனும் அப்பூவையின் பாதகமலங்களுக்கு அநேக வந்தனஞ்செய்து மனமகிழ்ச்சியோடுந் தங்களுடைய இல்லரத்திற் சேர்ந்து வாழ்ந்துவருங் காலையில் ஜகதீஸ்வரியாகிய கங்கை தனக்குத் திரம்பெற்றுக்கொள்ளவேண்டி வடவேங்கடமென்னும் திருப்பதிமலையில் அஷ்டாக்ஷரப் பொருளாய் வழங்கும் வெங்கடாசல பதியினது செந்தாமரைக் கமலம்போன்ற இணையடிகளை மனத்திலிருத்தித் தபஞ்செய்கின்ற விதங்காண்க.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

| | |
|---|---|
| வேதமுடிவில்விளங்கியசோதியே | ஆதிமூலா |
| பண்ணவர்களுக்கிருகண்ணாய்விளங்கிய | ஆதிமூலா |
| ஆதிமூலமென்றவானைக்கருள்தந்த | ஆதிமூலா |
| அடிமுடிவில்லனாதியாகின்ற | ஆதிமூலா |
| சீரோங்கும்படியின்றசெகமெலாஞ்சிருட்டிக்க | ஆதிமூலா |
| சிந்தைகொண்டேவிதியையுந்தியில்வரச்செய்த | ஆதிமூலா |

மட்டற்றசெனங்கள் மண்மீதுதிக்கச்செய்த   ஆதிமூலா
மன்மதராசனைமைந்தனாகத்தந்த   ஆதிமூலா
பாவவிமோசனஜீவனந்தழைத்திட   ஆதிமூலா
உந்தன்பதத்திலெனைத் தந்தபராபரா   ஆதிமூலா
தேவருங்காணத் திருவடிகான்காண   ஆதிமூலா
திருமலைகளைவிட்டு வருவாய்மனமிறங்கி   ஆதிமூலா
ஓரடியாலிந்த வுலகத்தையளந்தவா   ஆதிமூலா
பக்ஷமாகஜெய ரட்சகனேவருவாய்   ஆதிமூலா
பூதகிபாலுண்ட நாதனேயிவ்வேளை   ஆதிமூலா
சிறியாள்செய்தவத்திற்குச் சீதாராவருட்செய்யும்   ஆதிமூலா

இதுவுமது விருத்தம்

சங்குசக்கரகோதண்ட கெதைவாளேந்துந்
    தனிக்கெருடன்மீதேறி முனிவர்சூழச்
சிங்காரஞ்சொட்ட மீன்கள்நாதா
    செகந்துதிக்கும்காசாம்பு வண்ணனேவழை
பங்காளபாரளந்த பாதங்காணப்
    பார்வதியாள்சகோதரனே பட்சமாக
மங்காமற்காத்தருளு மாலேயுந்தன்
    மலரடிக்குவெகுகோடி சரணஞ்சாமி.

இதுவுமது விருத்தம்

ஆதியாயனாதியா யகிலலோகநாதனே
வேதியன்றனையளித்த வெண்ணெயுண்டவாயனே
கோதிலாமதிகுலத்துக் குந்திமைந்தன்வல்லவனே
சோதியாகயென்முன்வந்து தோன்றுவெங்கடேசனே.

போது வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப் பிரகாரந் தவஞ்செய்து வரும்படியாகிய கெங்காபவானியின் தபத்திற்கிரங்கி ஸ்ரீவைகுந்தநாதனாகவும் அஷ்டாட்சரப் பொருளாகவும் அழகிய வெங்கடாசலபதியாகவு மிலங்குஞ் சகதீசன் வருகிறவிதங்காண்க.

இதுவுமது விருத்தம்

அருமறைமுனிவரோத வஷ்டலட்சுமியுஞ்சூழத்
திருவாழிசங்கவாளுந் தெண்டுடன்சிலையுமேந்திக்
கருடவாகனமீதேறிக் கங்கையுமனங்களிக்கத்
திருமலைவெங்கடேச தேவனும்வருகின்றாரே.



இதுவுமது-தரு-இ ம்

கண்ணிகள்

சிங்காரகெருடனேறித் திருமலைவெங்கடேசன்
கங்கையம்மன்மகிழ்ந்திடவே தேவாதிதேவன
கண்ணனிதோவந்து தோன்றினான்
ரத்தினமகுடமின்ன நங்கையர்கவரிவீச
பக்தர்கள்பாபவிமோசன தேவாதிதேவன்
பாரளந்தோன்வந்து தோன்றினான்
ஆழிதண்டம்சங்கம்வாளும் மழுகுருவுஞ்சிலையுமேந்தி
வாழிவாழியதன் றேத்ததேவன்
மங்களமாய்வந்து தோன்றினான்
திருப்பதிநகரில்வாழுஞ் சீறரும்ரத்தினபூபன்
விருப்பமாய்பணியுங் கேசவன்தேவாதிதேவன்
தேவநாதன்வந்தீ தோன்றினான்

கெங்காபவானிசொல்-சீசபத்தியம்

சீதாமுகுந்தனே தேவாதிதேவனே
    செழுமலர்த்தாட்கடியவள் சரணமிதுவே
மாயவாவுலகோரடிக் குன்னளந்தவா
    மலரடிக்கடியவள் கோடிசரணம்
யாதவாநீமுன்பு சிலைந்தனைப்பெண்ணுக்கு
    மாலிந்தவடிகளுக் கையாசரணம்
வேதனைதந்தவா மெய்யர்க்குமெய்யனே
    விப்பிரர்கள்பூஜிதா வேணசரணம்
ஏதுகுறையேதுபிழை செய்தபோதும்
    நீதெல்லாம்பொருத்தருளுந் தேவதேவ
காதலாய்முன்வந்த கருணைமுகிலே
    பாதகதிவேறில்லை பகருவீரே.

கெங்கைக்கு வெங்கடேசபெருமாள்சால் விருத்தம்

பிரியாமலென்பதத்தி லிருக்குங்கெங்கை
    பிர்மகுலபுத்திரியா யுருவங்கொண்டு
பரிவாகவென்பதத்தை நாடிநீயும்
    பட்சமுடன்றபமிழைக்க வன்புபூண்டாய்
நெறியின்றநீமகிழக் காட்சிதந்தேன்
    நீவேண்டித்தவம்புரிந்த நிலைதானென்ன

சரியாகவேண்டியதோர் வார்த்தைக்கேட்டால்
தப்பாமற்றந்திடுவேன் வாழிநீயே.

வசனம்

கேளுமம்மா கங்கையே சதாகாலமும் என்னுடைய பாதங்களினின்றும் நீங்காதவளாதலால் இப்போது பூமியின்கண் வேதகுலப் பெண்ணாக ஜனித்து எந்தனைநோக்கித் தவஞ்செய்த காரணமி யாது அதை நீ அறிவிப்பாயாகில் அவ்வாறே வரமளிப்பேனம்மா கங்கையே.

கெங்கையம்மன்சொல் விருத்தம்

அச்சுதனேநீரறியா துலகிலுண்டோ
வரனுடையகட்டளைக் கொண்டுவந்தேன்
நற்சரவத்தோள்மகிழும் நாதர்கேண்மோ
நானுமிந்தவுலகெலாஞ் சஞ்சரித்தே
அச்சமிற்றேவதையாதி பிணிகளெல்லா
மடங்கியென்;ன்சொற்படிக்கு நடக்குமாகில்
கொச்சையுள்ளமானிடர்க ளன்மைதீமை
கொண்டவர்;ளெனைத் துதிக்கவருட்செய்வீரே.

வசனம்

கேளும் வெங்கடாசலபதியாகிய பகவானே அகில சராசரங்களுக்குள் நீரறியாத செய்கையுமுண்டோ பேதையாகிய யான் ஸ்ரீகைலாசபதியாகிய பரமசிவன் கட்டளையின்படி இவ்வுருவங் கொண்டு பூலோகத்திலுள்ள துர்த்தேவதைகளையும் வல்வினைகளையும் என்கைவசமாக்கி அக்ரமமிகுந்த துஷ்டரை நிகர்த்தும் எமனுடைய தொழிலு மிஞ்சவொட்டாம லடக்கியும் இப்புவன முழுதும் என்னை கொண்டாடும்படி வேண்டிவந்ததால் அதுபோல கடாக்ஷம்வைத்தருள வேண்டுந்தேவனே.

வெட்கடாசலபதிசொல்-தரு-இ-ம்

விஸிடை கண்ணிகள்

தடையில்லாவரந்தந்தேன் கங்கையேநீயும்
சற்றுமஞ்சவேண்டாங்கையே
நெடியவகிலமெங்கும்டியச் செலுத்துங்கீர்த்தி
நிலைநாட்டயுன்நெடியுல கங்குமிருத்திடத்



வினா

நல்லவரம்பெற்றேனே மாதரை இனி
வில்வலிதந்திடுவாய் யாதவ
செல்வமிகுந்திடுந் தீரரெவருமஞ்சக்
கல்வியுளோரெனது கழலுக்கடிமைசெய்ய நல்ல

விடை

வெற்றிகொள்வாருமுண்டோ எந்தனை-உனக்கு
மெத்தவுந்தந்தேனே னின்சிந்தனை
னித்தமுமுன்பாதம் நீங்காமற்பூசித்து
பத்திசெய்புமன்பர் பாகதிக்கிடமாக வெற்

வினா

சண்டுளதிர்த்தோரை வெல்லவே-இந்த
மண்டலத்தினில்கீர்த்தி கொள்ளவே
தண்டொடுவேல்சூலந் தநுர்வாள்கேடயமுத
லுண்டானவாயுதமுகந்து தந்தருள்வீரே. கண்

விடை

சூலம்வேலம்புக் கூடுகள்-நல்ல
காலதண்டமுஞ்சிங்கத் தோடுகள்
மேலானவாயுத விருதுகள்தந்தேனே
காலாகாலமுமிந்த காசினிபுகழவே சூலம்

வினா

முந்தித்துணையாகவந்திட எந்தன்
சிந்தைதேறவரந் தந்திட
வந்தருளில்லாம லுலகத்திலொருவகை
யெந்தவிதத்திற்செல்லு மேகமூர்த்திதேவா முந்தி

விடை

போர்த்தொழிற்செய வுன்னாலாகுமோ-எந்தன்
வார்த்தைவிணாகவே போகுமோ
நீரத்துடன்புவியிற்செப்பும் பிணியைத்தூண்டி
ஆேரத்திலஞ்சாம நீவெற்றிபூணுவாய் போர்

விருத்தம்

சக்கரமேந்தியகையனே-அன்பு
மிக்கயிருக்கவேண்டுந் துய்யனே
பக்குவமாயுந்தன் பாதந்துதிசெய்ய
மிக்கவினைகளும் விட்டுப்பறக்கவே சக்கர

பொது விருத்தம்

ஆயன்வரம்பாலிக்க வம்மனுக்கிச்சையாகி
மாயவன்துணையைக்கொண்டு வந்துசஞ்சரிக்கும்போது
வோயாமல்வினைகளோடே வுக்ரகோபங்கள்கொண்டே
தூயவச்சிவனுல்வந்த சுரங்களையறிகுவீரே.

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனுக்கு ஸ்ரீயப்பதியாகிய வெங்கடாசலபதி வரம்பாலித்த பாண்மையைக்கொண்டு அன்னவர் துணையாற் றனியளாய் வுலகிற் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் பரிசுத்த பரமசிவன் அச்செயலையறிந்து தனது சடாடவியினின்றுங் கெங்கை நீக்கிய தன்மையாற் கடுங்கோபங்கொள்ள வக்கோபங்களானது சுரவியாதியாகி உலகவாசிகளைப் பொருகின்ற விதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

சுருக்குடன்விழியைக்காட்டிக் கால்மூன்றுந்திரிகண்டங்கள்
பெருக்கமுமொட்டைநாக்கும் பிதிர்படவருங்காலத்தில்
நெருக்கியசூலம்வேலும் நிகரிலாத்தனுவாளேந்தி
சுருக்குடன்கங்கைமுன்னர் சுரம்வரும்வகையைப்பாரீர்.

சுரநோய்வருகிற-தரு-இ-ம்

பல்லவி

சுரமிந்தவுலகத்தில் வரமுந்திரமுங்கொண்டே
பரவும்பான்மையைப் பாருங்கள்

அநுபல்லவி

பரமனருளாலிந்தப் பாரெங்கணும்பரவிப்
பாலம்வேற்பிண்டி சூலவாளியுங்
கோலமார்த்தண்ட மேலுமின்னவே சுரம்



சரணங்கள்

சிறித்திரிகண்டங்காட்டி வீறிக்கொண்டதநுற்பூட்டி
சிரத்தகோரமீட்டி விரித்தநாவைகாட்டி
அரிகண்டம்படுமாந்தர் நெரிகொண்டேசலித்திட
ஆருமிஞ்சவே பேருகிஞ்சிய
கோரமாகவே வீரியத்துடன் சுரம

நடுக்கங்கொள்ளவேயாரு மெடுக்கும்புகழுங்கீர்த்தி
நாடெல்லாம்பரவிய தாடாண்மையோபூர்த்தி
துடுக்குள்ளமனிதரை யடக்கவுந்திரமுள்ள
சுற்றவீரியம் பெற்றுசுரமதில்
கத்திகேடயம் பற்றிவீசியே சுரம்

காட்டித்தன்மகிமையை வாட்டியேயுலகோரைக்
கருக்காய்விழித்துமீசை முறுக்கியேதோள்தட்டி
நாட்டங்கொண்டுவந்துயர் மேட்டிமையாகவே
நாடியெங்களைத் தேடிவந்தவர்
வோடிப்போகவே ஜாடுவேனென சுரம்

சுரநோய் கெங்கையம்மனுக்குச்சொல் விருத்தம்

அண்டொணுக்காலமெல்லா மகிலத்திற்சஞ்சரித்தேன்
தண்டித்துவீரங்கூறிச் சவுரியஞ்செலுத்தவாராய்
கண்டித்துவிடவேயெந்தன் கையினுலாகாதுண்டோ
துண்டித்துவிடவேவந்த சூரத்தையறிகுவாயே.

வசனம்

ஆ ஆ பளா பளா யான் பரமசிவனுக்கிழைபினுலே அகிலமெண்டிசையும் எனது வீரியஞ்செலுத்தி வெகுநாளாய் சஞ்சரித்து வர இப்போது நூதனமாக தெண்டித்துச் சவுரியஞ் செலுத்த வந்த நீயார் உன்னைக் கண்டிக்கவும் தெண்டிக்கவும் பராக்கிரமுண்டாதலால் எதிர்த்து வாருங் கன்னிகையே.

சுரநோய்க்குங் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்

மறைகுலகங்கையம்மனுடா அடாசைவசுரமே
மகிழ்ந்துவீரம்புகழ்ந்துபேசுராய் அடாசைவசுரமே-மகி

விடை

பேசுவீரம்பின்புதெரியுமே ஓகங்கையாளே
பேதையேதுக்குவாதைநேருமே கங்கையாளே பேதை

வினா

வாதைப்படவேண்டாங்களித்துமே ஓசைவசுரமே
வந்துபணிவாயெந்தன்பாதமே ஓசைவசுரமே

விடை

பாதம்பணிவாயென்றவுந்தனை ஓகங்கையாளே
பதைக்கவதைக்கப்பாணமெடுத்தேனே ஓகங்கையே-பதை

வினா

எடுத்தசிலையைத்தடுத்தேன்பாரடா ஓசைவசுரமே
ஏண்டாவீணாய்மாண்டுபோகிறாய் ஓசைவசுரமே-ஏண்டா

விடை

மாண்டுபோகவந்துயெதிர்த்தனை ஓகங்கையாளே
மாறாச்சுரங்கள்மீறிவிடுத்தனே ஓகங்கையாளே மாறா

வினா

மீறிப்பூறிவருகுஞ்சுரங்களை அடாசைவசுரமே
வெட்டியெரிவேனட்டியேதடா ஓசைவசுரமே-வெட்

விடை

அட்டியில்லாமலேவிட்டுசரங்களை ஓகங்கையாளே
அஞ்சியோடவேமிஞ்சியடிக்கிறேன் ஓகங்கையாளே-அஞ்சி

கெங்காபவானிசொல் விருத்தம்

அடிக்கிறேனென்றுவினை யாண்மைகள்மிகவுங்கூறிப்
படிக்குறாய்கற்றதெல்லாம் படிக்கிலென்வில்வளைத்து
ஒடிக்குனன்றலையுங்கையும் நொறுக்கியேசிதறியோடப்
பொடிக்குறேனிதோமுன்பாகப் பூட்டினேன்பாணந்தானே.

வசனம்

அடா சைவசுரமே அடிக்கிறேனென்று நீ வினையைக் கற்றவித்தைகளையெல்லாம் வாயில்வந்தபடி பிதற்றுவதால் என்னபிரயோசனமாம் இதோபார் ஓர் நிமைப்போதில் வில்வளைத்து உனதுசிரமுங் கரங்களுஞ் சிதறிப் போகும்படியாய் கணையைத் தொடுக்கிறேன் பாரடா சைவசுரமே.



சைவசுரத்திற்கும் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்

வினாவிடைக்கண்ணிகள்

உக்ரமுகபாணத்தாலே மிக்கவுந்தன்பாணந்தன்னை
வோட்டியேயமனுக் கிறைகாட்டுவேன்
திக்குகணிறைந்திடவே யக்கினிச்சுரங்கடன்னைத்
தீட்டியேதனுவிற்பூட்டிமீட்டுறே னுன்றனைக்கொல்ல உக்ர

விடை

கொல்லவந்தேனுந்தனையும் நல்லதாகட்டும்
கோடானகோடிசுரங்கள் தாக்குவேனிதுவன்றியும்
தொல்லுலகமுழுமையும் வல்லமைசெலுத்தவேண்டி
தோற்றுமஜெயங்கொண்டே சொற்குற்றனுலவகற்றிடவே கொல்

வினா

விட்டசுரமதுவல்லாமல் மட்டிலாச்சரந்தொடுத்தே
மீறிவந்துதக்காமலேஜாடினேன்
அட்டியில்லாதுன்றனையும் வெட்டிகானெறிந்திடவே
அமோகமாகபாணந்தன்னைத் தூண்டுறேன்பாரடாயிப்போ விட்

விடை

என்னிடமகுத்துவங்கள் தன்னையறிந்திடாமல்
யேதடாவீரிய மெத்தபேசுறாய்
மின்னியசரங்களாலே பின்னமாகச்செய்வேன்
வெற்றிமொழிமெத்தப்பேசி வீசுறாய்விதிமாண்டதோ என்னி

சைவசுரஞ்சொல்லும் கந்தார்த்தம்

கண்டஞ்சியுலகோரோதக் காரியமறியவேதான்
பெண்டஞ்சவீரம்பேசா பெலத்தினைப்பாக்கவேண்டித்
தண்டந்தோமரமும்வேலும் சக்கரம்வில்வாளேந்தி
துண்டந்துண்டங்களாகத்
துண்டிப்பேன்பாராய் சரங்களாலேகண்டிப்பேன்பாராய்
துண்டந்துண்டமாகவே மண்டைசிதறிடவே
கொண்டுதோமரத்தாலே நின்றுநான்ஜாடியே துண்டி

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்

உற்றதுசொல்வேன்கேளு உன்னிடவலுவைக்காண
யித்தனைநேரமாக யிருசினமீறெட்டாது

பத்தியைக்கண்டறிந்தேன் பகைக்கிருய்மிகவுமீறி
வெற்றிகள்பெறவேயுக்ர
வீரியங்கொண்டேன் வலுமைபேசுங்காரியங்கொண்டேன்
மீறிவுதிரமும் பீரிபீரியெழ
வீறியகணைகளை மாறிபோற்பொழிய வீரியங்

சைவசுரஞ்சொல் கந்தார்த்தம்

ஒப்பிலாத்தாயேபோற்றி யுலகமாதாவேநீயே
எப்படிபிழைப்பேனம்மா என்னைநீவதைக்கவேண்டாம்
செப்பியமறைகுலத்துச் செல்வியென்றுனையெதிர்த்தேன்
தப்பிதந்தனைப்பொறுத்து
தாயேநீகாரும் உனக்குரிய மாய்கையைக்கூறும்
தாயேஎன்னிடகாயமுன்னுதே
வாயினால்வரஞ்சேயனுக் கருள்தாயே நீகாரும்

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்

இலகியகயிலைவாழிமீசனார்சடையிலோங்கும்
பெலமுளகங்கைநானே பிராமணக்கன்னியாகி
யுலகினிலிருக்குந்தெய்வ முங்களைவசப்படுத்தல்
கலகஞ்செய்துலகில்மாய்கை
நாட்டிடுவேனே எனதுபுகழ் நாட்டிடுவேனே
நாட்டிதுஷ்டரை வாட்டியன்பரை
நாட்டிவன்புகழ் பூட்டவந்தேன் காட்டிடுவேனே.

கெங்கையம்மன்சொல் கொச்சகம்

இன்பம்பெரும்படியா யென்னிடத்தில்நீயிருந்து
துன்பமேசொற்படிக்குக் கேட்பதாய்தருஞ்சுரமே.

சுரநோய்சொல் கொச்சகம்

அன்பாகுமெந்தாயே யாரறிவாருன்மகிமை
தெம்பாயுன்சொற்படிக்கே சேவகமுஞ்செய்திருப்பேன்.

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் திருப்பதிமலையி லெழுந்தருளியிருக்கும் வெங்கடாசலபதியினது அருள்பெற்றிலங் குங் கெங்கையம்மனானவள் தன்னைப்பற்றவந்த சைவசுரத்தை யெதிர்த்து வில் வேல் வாள் முதலிய ஆயுதங்களாற் போர்புரிந்து இன்னுந் தன்மகிமையை எடுத்துக்காட்டிய சுரத்தைத்தனது கை



வசப்படுத்திக் கொண்டபின்னர் விஷ்ணுசுரமென்னும் வாதசுரம் வருகிறவிதங்காண்க.

இதுவுமது- விருத்தம்

மூக்காலுந்திருகண்டங்கள் துப்பிறைதந்தமோங்க
யெக்காலுமுலகமஞ்ச வீரிருகரங்களோடு
திக்கொருமதிசயிக்கச் சேலையொட்டியாணமிட்டே
சொக்கதவிழிகள்காட்டிச் சுரம்வருந்தன்மைபாரீர்.

விஷ்ணுசுரம்வருகின்ற-தரு-இ-ம்

நொண்டிச் சிந்து

சுரமிதோவருகுதுபார்-விஷ்ணு
கோதிமதிபோலுந்தம் மாதர்வடிவாய்
காமதிலாயுதங்கள்-தாங்கியே
கண்டவர்நடுங்கிடவே கொண்டவிடிபோல்
அதட்டியேபொறிபறக்க-மூன்றுகால்
ஆறுகரமூன்றுசிர மீறிவடிவாய்
பதட்டமாயுதட்டைக் கவ்வியாக்ரமித்துப்
பன்னுங்கடற்றிரைபோல் நாக்குகண்ணீட்டி
சேலைசரிகைமின்னவே கெக்கலிகொட்டி
சித்திரபலபணிகள் முற்றுமிலங்க
காலிற்சிலம்பொலிக்கவே வீசிநடந்து
கண்ணையுருட்டிக்காட்டி-விண்ணவரஞ்ச
ஆரடிமிரட்டிவந்தவள் உலகந்தன்னில்
ஆதிமாலருளால்வந்தவாதசுரம்-நான்
பாரடிஎன்னிடவீரியம்-ஒருநொடிக்குள்
பற்றியுன்னைத்தத்தளிக்கவைத்திடவந்தேன்-தனானந்தனதன

இதுவுமது விருத்தம்

வையகமெல்லாமஞ்சும் வைணவசுரமென்றாலே
பொய்க்கபடங்கொண்டென்னைப் பிடிக்கவந்தாயன்றோ
பொய்யகத்திறமுங்கொண்டு விடுவேனோயுனைஇப்போது
செய்யவென்மாயன்பாதஞ் சிந்தையிற்சிந்திப்பேனே.

வசனம்

ஆடா பொய்வேடங்கொண்டு என்னை நீபிடிக்க வந்தாயன்றோ ஆ ஆ வைணவசுரமென்றால் வையகமெல்லா நடுக்கமென்பதறியாயோ இதோ உன்னை எதிர்க்கிறேன் பாரடி.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனவள் தன்னைவந்தெதிர்த்த வைணவசுரமென்னும் வாதசுரத்தைக் கண்டு கோபங்கொண்டு வினவுகின்ற விதங்காண்க.

### வினாவிடைக்கண்ணிகள்

ஏதடி சவுரியஞ்சுரமே — என்னை
எதிர்த்தாலறிகிறேனுனது தீர — மே
சூதடிநீமெத்தச் சொல்லும்வசனமெல்லா — ம்
சுரமாகவந்தகாரியமறிவேனடி — ஏதடி

### விடை

ஆரடிநீயிங்கேவந்தாய் — என்னை
யதட்டியதட்டிமொழிந்தா — ய்
கூறடியுன்னிடயூறும்பேருமறிய — க்
கொஞ்சத்தில்விடுவேனோ கெஞ்சத்திலறிகுவாய் — ஆரடி

### வினா

மறைகுலந்தனில்வந்தகெங்கை — யானும்
வந்தேனேயுனைத்தேடியிங் — கே
தரைபுகழ்கீர்த்தியுஞ்சவுரியந்தெரியா — மல்
தாண்டிக்குதிக்கலாமோ மூன்றுகால்களாலும் — மறை

### விடை

கங்கையேயுனக்கெனக்கென்ன தீரம் — என்னைக்
கடித்திடச்சொல்லுமோ — வீரம்
மங்கையேயெதிர்த்தென்னை மடிந்திடக்கால — மோ
மாட்டிச்சிலையதனிற் பூட்டுவேன்பாணங்கள் — கங்கை

### வினா

வரிச்சிலையெடுக்கிறேன்பாரு — சர
மாரிசொரித்திடுமின்னே — ரு
அரிதாகியவெகுவஸ்திரம் — வருகுது
அங்கம்பதறிவாடச் செங்குருதிகளோட — வரிச்

### விடை

அடிப்பேனென்னுவீரமேது — வது
வறியாமற்செய்கிறாய்வா — து

O-813.1 KP.G
N54



துடிப்புவசனமாமோ சூரத்தைக்காண — வே
துன்னுங்கணையினாலே பின்னப்படவிடுப்பேன் — அடி

### வினா

எந்தன்மகிமைகாணப்போமோ — அடி
யென்னைசெயிக்கவுன்னாலா — மோ
வந்துவீணாய் வல்லாண்மைபேசு — றாய்
வாட்டிவிடவேஇதோ பூட்டினேன்பாணங்கள் — எந்தன்

### விடை

தொட்டாலுனக்கொருதீரம் — வருமோ
தொல்லுலகோர்விசா — ரம்
விட்டாவருஞ்சுரங்கள் வெல்லவல்லமையுண் — டோ
வீரியம்பேசாதே காரியமுணராமல் — தொட்

108905

### கெங்கையம்மன்சொல் விருத்தம்

கனகமாரொளிவுதன்னைக் கண்ணலான்காண்பதுண்டோ
வனசமாமலரின்தன்மை மண்மேலறியப்போமோ
எனதுளமகிமைதன்னை வெளிதல்லவறியநீயும்
வுனதுளமறியவேண்டி யொடுங்கினனிருக்கின்றேனே.

### வசனம்

அடி மாதவசுரமே பளாபளா மெத்தகெட்டிக்காரி தான் உலகின்கண் தங்கக்கட்டியினது பிரகாசத்தைப் பிறவிக்குருடனறிவானோ தாமரையின் மணத்தைத் தவளைகளறியுமோ அதுபோல். எனது மகிமையை நீயறியமாட்டாய் உன்னுடைய திறத்தையறிய வேண்டி யானிதுபரியந்த மடங்கியிருந்தேன் இனிமேல் உன்னைத் தெண்டிக்கத் துணிவுகொண்டேன் பாரடி.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் கங்கையம்மன் கூறியதைக்கேட்ட மாதவசுரமாகிய பெண்ணனவள் மகாகோபங்கொண்டு கண்களில் தீப்பொறிசிந்த கங்கையைநோக்கி கூறுவாள்,

### மாதவசுரத்திற்கும் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்

### வினாவிடைக்கண்ணிகள்

மறைகுலப்பெண்ணேநீயாரடி — கிமைக்குள்
மாய்த்துன்னைவிடுகிறேன்பார — டி

திரமறியாமலேசெப்புருயே தோ
சேதிக்குறேனண்டம் பேதிக்கும்படி யாகமறை

விடை

அண்டம்பேதிக்கவும்வல்லையோ உனது
அஸ்தத்திலேசிலையில்லை யோ
கண்டதுண்டமாகக் கண்டித்தேன்வாளியா ல்
காட்டுகிறேன்கழுருக் கிடுகிறேனுன் னை அண்

வினா

கழுருக்கிறையாகச்செய்வதும் இந்தக்
காசினிமேல்நின்றுய்வது ம்
முழுதுமரியவே மூட்டுறேன்நீ யை
முன்னின்றுபேசாதே மூடடியுன்வா யை கழு

விடை

வாயைமூடச்சொன்னநாயே இதோ
வருகுதுபார்சூலம்பே யே
நோயாயெழுந்தவுனக்கேனிந்தகொட்ட ம்
நொறுக்கியேதண்டத்தால் முறிக்கிறேன்காங்க னை வாயை

வினா கந்தார்த்தம்

காசினிபுகழுகின்ற கங்கையுஞ்சினந்தமீறி
வீசியேவிட்ட சூலம் வீழ்ந்திடவதைக்கண்டித்தே
கூசியேயவளும்வாடக் கொக்கரித்தெழுந்துநின்று

தேசிகனென்னைமெச்ச

திரமுடனேதொடுத்தே னகோரபாணம்
தீரமும்பலவீரமுமஞ்சவே
பாரமாங்கணைகள்கோரமிஞ்சவே தீரமுடனே

விடை-கந்தார்த்தம்

சுரமென்றுனக்குவஞ்சகஞ் சுந்தரிநானேவலல
பரமன்செஞ்சடையிற்றங்கும் பாவையென்றறிந்திடாமல்
வரமிஞ்சிவந்ததேது வுள்ளமும்பதறிடாமல்

காமிஞ்சித் தொழுதேகிற்கக்

காட்டினேன்மகிமைபாரடி அகோரபாணம்
பூட்டினேன்மனதுதேறடி



காட்டியேவுந்தனை வாட்டியேயடக்கவே
கூட்டினேனென்கொடி நாட்டினில்நிற்கவேகாட்டி

வினா கந்தார்த்தம்

மிக்கவேசூடுகாட்டி வீரியந்தனையடக்கி
வக்கினிதன்னைமூட்டியதஞ்செய்யநொந்தேனம்மா
வுக்ரகோபங்கள்கொண்ட வுன்னிடமகிமைதன்னை

கக்கிகள்போலவந்த

காரியந்தனைக்கூறுவா என்னையெதிர்த்த
வீரியஞ்சொல்லியே மீறுவாய்
காரியமேதுநீ கோறிப்பிடிக்கவே
பாரிலெந்தனை மீறியடக்கவே காரியந்

விடை கந்தார்த்தம்

திங்களைத்தரித்தயீசன் செஞ்சடைதனிலிருக்கும்
கங்கைநான்பூலோகத்தில் கன்னிகையாகவந்தே
மங்கைவுருவுகொண்டு மானிடர்தம்மைக்காக்க

உங்களைவசப்படுத்தி

உலகில்சஞ்சரித்திடுவேன் எந்தனைக்கோற
வலுமைகள் செலுத்திடுவேன்
உலகிலன்பர்கள் நலமதுசெய்திட
பலபலதுஷ்டருஞ்சிலபிணியொடுங்கவே உலகில்

பொதுவிருத்தம்

அறிவையின்மகிமைதன்னை யறியாமலெதிர்த்தோமென்று
பெருமையாய்ப்பிணிகளெல்லாம் பின்புசொற்படிநடந்து
வருகவேகங்கையம்மன் மகிமையையுலகிற்காட்ட
குருகியேகாளியம்மன் கோபித்துவருகின்றாளே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாச பதியாகிய உமாமயேசனது சடாடவியில் விளங்குங் கங்கையாகிய மறைகுலப் பெண்ணினுடைய மகிமையை இன்னதென்றறியாமலெதிர்த்தோமென்று நடுங்கிப் பிணிகளெல்லாம்வந்து அம்மனைப் பணிந்துநிற்க அவைகளைத் தன் சொற்படி நடக்கும்படியாய்கைவசப்படுத்தி பின்னர் தனதுபெருமையை உலகத்திற் றெரிவிக்க

அப்போது அதைக்கண்ட வடபத்திரகாளியானவள் கங்கையின் மீது கோபித்து மகாவுக்ரத்தோடும் வருகிறவிதங்காண்க.

இதுவுமதுவிருத்தம்

அண்டரண்டங்களெல்லா மதிரவேயார்பரித்துத்
தண்டமுஞ்சூலம்வேலுந் தனுவுடன்கரிசைபாலா
கொண்டுபொற்பணிகள்மின்ன கொடியராக்கதர்கள்பூதம்
கண்டிடவணங்கிச்சூழக் காளியுமெதிர்த்திட்டாளே.

வடபத்திரகாளிவருகிற-தரு-இ-ம்

பல்லவி

வந்தனளேவடபத்திரகாளி நல்ல
மகிடசங்கரியுந்தரிகிடதகவென
தந்தனங்கள்பாடிவர பூதங்களிந்த
தாரணியில்கெடிபெற்ற நாரணியகோறி
சிங்கவாகனத்தின்மீதுபலறிட நல்ல
செகச்சோதியாயிலங்கு மகிலகாரணி
சம்பிரமுடன்முரசரை யெறித்தவளைச்
சாரிவரும்பேய்பூத மீறித்துடிக்க
ஆடையுபரிமளம்வீசசெப்பரிய
அண்டர்முனிவர்கள் கண்டுதுதிபேச
பாடகச்சதங்கைகள்கொஞ்ச திரைசூழும்
பாரனைத்துப்புகழ் கெடிசண்டனுமஞ்ச
தண்டமொடுவில்லும் வேலும்வாளும்நல்ல
சங்காழிச்சூலமும்பிண்டி பாலமுடனே
கொண்டுசுரங்களாட நல்ல
குறளிக்கணங்களெங்கும் புகழ்பாட
வந்தனளே வடபத்திரகாளி

காளிசொல் விருத்தம்

பாவையேபிச்சகற்றுப் பாரெலாம்புகழுமெந்தன்
காவலையகற்றிக் கடித்திடபிணியைவிட்டு
மேவியவகைதானென்ன விடுவனேவுன்னையிப்போ
தாவியேவாளினாலே சங்கரித்திடுவேன்பாராய்.

வசனம்

ஆ ஆ ஆரடிகன்னிகையே கெடிய கடல்சூழ்ந்த இப்புவன மனைத்தையும் பாதுகாத்துவரும் வடபத்திரகாளி யென்று சற்



றேனு மஞ்சாமல் உலகின்கண்வாழு மானிடர்களுக்கு பிணிகளைத் தூண்டி வீரியஞ்செலுத்திவரும் உன்னை எனது வீரவாளுக்கிரை யாக செய்வேன் பாரடி.

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கூறிய வடபத்திர காளியைப் பார்த்து கங்கையம்மனானவள் மிகவும் வுக்ரத்தோடுங் கூறுவாள்.



கெங்கையம்மன் சொல் தரு-இ-ம்

பல்லவி

ஏதடிகாளியென் னெதிர்நிற்கிறதேது
யென்னடிவகைசொல்லடி

அநுபல்லவி

வர்துகள்செய்வது நீதியுமல்லடி
வந்தேனேயுங்களை யடக்கியாள்வதற்கு ஏத

சரணங்கள்

வாட்டமுற்றேடச்சிலை மீட்டியசரங்கள்பூட்டி
வாளனழித்தேயுனை யோட்டுவேன்பாரடி

காளிசொல்-தரு-இ-ம்

அச்சமில்லாமல்வந்தாய் நீயெந்தவூரடி
அறியச்சொல்லடிதந் தாய்களின்பேரடி
மெச்சியேவந்திட வுச்சிதமாமே
மீறியேகணைகளை விடுக்கலாமோடிநீ
மீறிவந்துனைப் பாரில்வீழ்ந்திட
கூறுசெய்குறேன் பாரடியிப்போ — அச்ச

கெங்கைசொல்தரு

நானேதிருப்பதிமாமறை குலந்தனில்வந்தவள்
நானிலமெச்சவேகெங்கை யானெனப்பெயர்தந்தவள்
யேனோவீண்மதிகொண்டு யெந்தனைவந்தெதிர்த்தாய்
யெதிர்க்கவுன்னாலாமோ எண்டிவீரியந்தந்தாய்
யீடில்லாதபலவாட லுமிஞ்சவே
தேடிவந்தனையோ யோடிப்போடிநீ — நானே

காளிசொல்தரு

கங்கையேவுன்னிடசவுரிய வீரியங்கண்டேனே
கங்கையேயுந்தனைப் பங்கமதுசெய்ய
நாடினேன்பாரிதோ சரங்களைபெய்ய
நாடிவந்துநீ மோடிசெய்வது
வாடிநல்லதே யோடிப்போடிநீ — கங்கை

கெங்கையம்மன்சொல்-விருத்தம்

ஓடிநீபோடியென்று னுலகெலாமுனக்குசொந்தம்
வாடிநீயுலகளந்து மாயவன்றங்கைநீயே
நாடியேயீசனோடு நாட்டியஞ்செய்தகாளி
தேடியேயதனாலிந்த திறம்பேசவந்தாய்போடி.

வசனம்

ஆ ஆ ஆரடி வடபத்திரகாளியே நீ இவ்வுலகை யளந்த நெடுமாலுக்குத் தங்கையானதினாலும் பரமசிவமாகிய உமாமயேசனோடெதிர்த்து வாதாடிய பாதமுடையவளாலும் உலகமெல்லாம் எனக்குச் சொந்தமென்று கெர்வப்பட்டு என்னை ஓடிப்போவென்று சொன்னையல்லவா நல்லதடி.



பத்திரகாளிசொல் விருத்தம்

கன்னியேமறைகுலத்துக் கங்கையேசொல்லக்கேளாய்
யென்னிடவலுமையெல்லா மெவர்களோசொல்லக்கேட்டும்
துன்னியேகட்சிகூறிப் பயமின்றிபேசவந்தாய்
சின்னபின்னங்களாகச் செய்குவேன்பாராய்வாடி.

வசனம்

ஆ ஆ அடியாரடி கங்கையென்னும் பெயருடைய பிராமணப் பெண்ணானதையால் எனதுவல்லமையை உனக்கு எவர்களோ சொல்லக்கேட்டு இகட்சியாய் பேசவந்த உன்னை சின்னாபின்னப்படுத்துவேன் பாரடி.

கெங்கையம்மன் சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

நீண்டசிலைதன்னைவளைப்பேன் காளியேயான்
வேண்டியசரங்கள் தொடுப்பேன்
நோராய்ச்சரங்கள்பூட்டி மாறுமலம்புபூட்டி
வாறுதயிடர்காட்டி மீறுமதுன்னையோட்டி
நீட்டியேயெனதுவீரம்பூட்டியே மோகச்சரங்கள்
மீட்டியபம்பரம்போல யாட்டியுனைத்தண்டிக்க — நீண்ட

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

வில்லெடுத்தேவந்து குதித்தேன்கங்கையடியுன்
வல்லமையறிய யெதிர்த்தேன்
வெற்றிபூதங்கள்பாடவே யெத்திசைகளும்பாடவே
பத்திகளைச்சாடவே தத்தளித்துவோடவே
பாரடியுலகந்தன்னி லாரடியென்னைவெல்வது
கூரடியுயிர்பிழைத்துத் தேறடிபுவியின்மீது — வில்

கெங்கையம்மன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

சந்திரமுகபாணமெடுத்தேன் அகோரமாக
வந்துவுந்தன்மீது தொடுத்தேன்
தாடாண்மைகளுமோதவே வாடாமுகம்வாடவே
தேடாதவகைபாடவே வோடாமல்மனமநோகவே

தேடவும்செயமங்களம் பாடவும்பூதங்கள்நொந்து
வோடவும்வுக்ரமிகுத்து ஜாடவுஞ்சினத்துமீறி சங்

பத்திரகாளி சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

தண்டாயுதந்தன்னையெடுப்பேன் சுழன்றெழும்பி
மண்டியிட்டுமோதியடிப்பேன்
தாவியேமனதுகூச தேவருந்துதிகள்பேச
பூவிலயன்றன்னையேச வாலவாய்வாட்கொண்டுவீச
தத்தவுந்தலையைக்கழு கொத்தவுங்காகங்கள்வந்து
கொத்தவும்கைகள்தேட மெத்தவுங்கோபமிகுந்து தண்

கந்தார்த்தம்

அடிக்கடிபாணம் நொடிக்குளேயேனி
மடக்கவேயுன்னை
பொடிக்குறேன்பாராய் சிதறியோட அடிக்கிறேன்பாராய்
வடிக்கணைவருகுது வருகுதுபாரடி
நொடிக்குள்ளேயுந்தனை யடிக்கவீரியமுண்டு
நோக்கியேமிஞ்சிப் பார்க்கிறயென்னடி
யேற்கவேயென்னவஞ்சக் தீர்க்குறேன்முன்னடி
நோகநோகவே வேகநெஞ்சமும்
போகவுன்னுயிர் சாகச்சாடுவேன்போடி

இதுவுமது

பொறுக்குமாவீரம் சுருக்குடன்பேச
நறுக்கெனத்தலையை
அறுக்கிறேன்போடி பொடிபொடியாய் நறுக்கிறேன்
பொறுக்காகவீரியச் செருக்கையறிவேன்டி
முறுக்கிக்குலுக்கியே திருப்பிப்பேசவந்தாய்
மூட்டுறாய்வீரத்தைக் காட்டுறயென்னடி
தீட்டுறாய்தலைதன்னை யாட்டுறாய்வாதாடி
மூட்டமூட்டவே விட்டசரமதை
தட்டியுன்றனை வெட்டியெரிகிறேன்

இதுவுமது

சத்திசாமுண்டியே மெத்தவேவீரங்கள்
பெற்றவளென்றுநீ



கெங்கையம்மன்சொல் விருத்தம்

வெற்றிக்குவந்தாய்பூட்டினேன்பாணம் இத்தோடேநொந்தாய்
அத்தனோடாடிடம் உற்றசெருக்காலே
தத்திக்குதிக்காதே மித்திரனக்கிது
சஞ்சலமிஞ்சியே யஞ்சுராய்பாரடி
யென்சொல்லுவேன்வீரம் வஞ்சிருளாடி
சாடுவேனுன்னைமூடுவாய்விழிபோடியிப்பவே தேடுவாய்வழி

இதுவுமது

அந்தணப்பெண்ணே யெந்தனையெதிர்க்க
உந்தனலாமோ
நொந்திடச்செய்வேன் நமனுக்தேடி வந்திடச்செய்வேன்
உந்தனைமடிக்கவே வந்திடும்பாபங்கள்
அந்தவிதத்திற்கே சிந்தைநொந்திட்டேன்
யுள்ளத்தில்நீசங் கொள்ளாதேகன்னியே
துள்ளத்துள்ளவேதலை தள்ளுவேனுன்னையே
ஓதவோதவேவாதநேருமே காதகாதமேயோடவாட்டுவேன்
சங்கரனையெதிர்த்தாடுந் தாயேயென்றுந்
தாழ்விலாமகிடனைச் சங்கரித்தாளென்றும்
மங்கையுநீயுமாயனுக்குத் தங்கையென்றும்
வரிசையுடவாயிரமாஞ் சிரத்தாளென்று
யெங்குமிரண்டாயிரமாங் கரத்தாளென்று
மியம்பிடுவார்த்தைக்காக விருந்தின்னேரம்
கங்கையுநான்தங்கிமனம் பொறுத்துக்கொண்டேன்
காணலாமென்வடிவைக் கடிந்துபாரே.

வசனம்

ஆ ஆ பளாபளா நன்றாயிருக்கிறது ஓகாளியே உன்னை ஸ்ரீகை லாசபதியாகிய பரமசிவனோடு எதிர்த்து நடனஞ்செய்தமேன்மை யுள்ளவளென்றும் தேவர்களுக்கு யிடர்செய்துவந்த மகிடா சூரனைச் சங்கரித்தவளென்றும் மங்கையாகியநீ ஸ்ரீவைகுந்த நாதனென்னும் மாயவனுடைய சகோதரியென்றும் அழகிய ஆயிரஞ் சிரமும் இரண்டாயிரங் கரங்களையு முடையவளென்றும் இயம்புந் தன்மையால் இதுபரியந்தம் மனம்பொறுத்து கொண்டிருந்தேன் இனிமேல் எனது வலுமையைக்காணலாம் நில்லடி காளியே,

பத்திரகாளிசொல் விருத்தம்

தந்தசொல்லதுமெய்தான் தடைபடாக்காளிநானே
அந்தணர்குலத்தில்வந்த வரிவைநீயாகையாலே
எந்தகாரியமுடிப்பா யெப்படி துணியுஞ்சிந்தை
வந்துநா னுன்னைக்கொல்ல மனதில்லாசமர்செய்தேனே.

வசனம்

ஆ ஆ வாராய்கங்கையே நீகூறியவிதமெல்லாஞ் சரியே அப்படிப்பட்ட பராக்ரமமுடைய யெனக்கு நீ பிராமணகுலத்தில் ஜனித்த உன்னைக்கொல்லுவதும் வெல்லுவதும் பெரியகாரியமல்ல ஆனதால் உன்னால் என்னநடத்தக்கூடுமென்றும் உன்னைக் கொல்லலாகாதென்றும் மனத்தளர்வுகொண்டு எனதுவீரத்தைக் காட்டாமலிருந்தேன் இனியொருகை பார்த்துவிடுவோம் கங்கையே,

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கங்கையம்மனானவள் வடபத்திரகாளி கூறிய வீரவார்த்தையைக்கேட்டு அதியுக்ரங்கொண்டவளாய் அடிகாளியேபாரடி யுன்னுண்மையை யறிகிறேனென்று ஒருவர்க்கொருவர் வீரகேசரியைப்போல் கெற்சித்து சமர்செய்யும் விதங்காண்க.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

பாரடிகாளியேநீயே யுக்ரமிகுத்துப்
பாரடிகாளியேநீயே

பாரடியுந்தன்மீதிப்போ வீரமாச்சரந்தொடுத்தே
பம்பரம்போலாட்டிவிடுவேன் மாரிபோற்கணை
தென்புடனேபூட்டிடுவேன்
பக்குவமதறிந்திடா வுக்ரமுகக்காளிகையே
மிக்கவேஎன்வாளிகளாற் செக்கைசெக்கையாகச்செய்வேன்

பத்திரகாளிசொல் தரு-இ-ம்

கண்ணிகள்

ஏதடிகெங்கையேவல்லமை அடியுனக்கு
ஏதடிகெங்கையே வல்லமை



யேதடியகோரமாக வாதுகள்செய்யவேவந்தாய்
யிடில்லாச்சரங்கள்தொடுத்தேன் பயமிகுத்தே
யோடவதிஉக்ரமடுத்தேன்
வெட்டியேமன்பதிக்கு அட்டியில்லையுனக்கேற்க ஏதடி

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

நேரமாமோவுந்தனைவெல்ல அடியெனக்கு
நேரமாமோவுந்தனைவெல்ல

நேரமாமோவுந்தனைவெல்ல கேந்திரமாகவெதிர்த்தேன்
நீண்டசூலந்தன்னையெடுப்பேன் உக்கிரங்கொண்டே
தாண்டிவந்துஉன்மீதுவிடுப்பேன்
நேசமுமுன்மீதுவைத்த பாசமுமகற்றியிதோ
வீசியேயென்கைதெண்டாலே தூசுபோற்பறக்கச்செய்வேன்

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

என்னமாயமோ நீசெய்குறாய் அடியம்மம்மா
யேதுமாயமோ நீசெய்குறாய்
என்னமோமறைகுலத்துக் கன்னியென்றிருந்தேனம்மா
யெந்தனலாகுமோவெல்ல கங்கையேநீயும்
வந்தவகைதன்னைச்சொல்லவே
பின்பம்வைத்தருளுமம்மா வும்பர்புகழ்நாயகியே
சம்பிரமத்தோடுந்தன்கீர்த்தி யிகந்தனிலறிந்திடவே

கெங்கையம்மன்சொல் விருத்தம்

ஆண்டகைக்கடவாழென்னை யக்ரமந்தன்னைப்போக்க
வேண்டியேவந்தயேமன் வேலையைக்குறைக்குமாண்மை
நீண்டவேலேத்துந்தேவி நீமகிழ்ந்துதவிசெய்யத்
தாண்டிநீவ நருவாயேற் றருநிவேதனஞ்செய்வேனே.

வசனம்

வாருமம்மா காளிகாதேவியே இப்பூமியின்கண் அக்ரமங்கள் மிகுத்து அந்தகனுக்கு ஒழிவில்லாமற் றொழில்மிஞ்சியதால் அவன் எனது நாயகனாகிய பரமசிவனிடத்தில் வந்து முறையிட அவர் சடாடவியிலிருக்கு மென்னை அக்ரமங்களையகற்றிப் புண்ணியத்

தைப் பெரும்பொருட்டுவிடைதந்தனுப்ப அதுபோலயான்வளர்ந் தவளாதலால் எனதுசெய்யுளை அறிந்த நீ இன்றுதுவக்கி எனக்கு உதவியாக விருப்பாயாகில் உனக்கு வேண்டிய நிவேதனங்கள் செய்து வருவேனம்மா காளியே.

பத்திரகாளிசொல் விருத்தம்

திரையெழுகடல்சூழ்வெய்த திலகுநற்கங்கையாளே
விரைசெறிகயிலைவாழும் வித்தகன்விடையையேற்றித்
தரைபுகழோங்கவந்த தயாபரியாகுமுந்தன்
வுரையதுபோல்நடப்பே னுத்தமிமகிழ்கொள்வாயே.

வசனம்

ஆ ஆ நெடியகடல்சூழ்ந்த இப்புவனத்தின் கண்ணோக்குங் கங்கையே தேவர்முதலிய யாவராலும் புகழத்தக்க ஸ்ரீகைலாச கிரியில் வித்தகனாகிய உமாமயேசனது விடையைக்கொண்டு இத் தரைமீதில்விளையும் இருட்கூட்டம்போன்ற பாறங்களை பருதிமுன் போல் விலகச்செய்து புண்ணியத்தை விளைவிக்கும் பொருளாய் விளங்கும் தயாபரியாகிய உனது உரையைப்போல் நடந்துக்கொள் ளுவே னாதலால் சித்தங்களிப்பாயம்மா உத்தமியாகிய கங்கையே.

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் மகிடாசூர சங் காரியாகிய வடபத்திரகாளி யம்மனானவள் கெங்கையம்மனுக்கு கைவசமாகிய பின்னர் உலகரட்சகனாகிய ஐயனாரப்பன் வருகிற விதங்காண்க.

ஐயனாரப்பன்வருகிற பொதுவிருத்தம்

மலையகனாய்மழைகடுத்த வாதிவாயன்
　மதியணியும்பரமசிவன் மகிழுஞ்செல்வன்
சிலைபிடித்துவயிராணி மானங்காத்த
　தீரனவன்பொற்பணிக ளலங்கரித்தே
கலையணியும்பளபளென மாதர்சூழக்
　கரியுரிமஞ்சனிகூத்தர் வணங்கிநிற்க
அலைகடல்சூழுலகமெலாந் துதித்தேபோற்றி
　லையனாரப்பனுமே வருகின்றாரே.



இதுவுமது தரு-இ-ம்

பல்லவி

அகிலத்தில்புகழ்பெற்ற மிகவெற்றிமணிசித்ர
அரிஹரபுத்திரர்வந்தார் மிகுபொற்புள　　அகி

அநுபல்லவி

இகல்பொருதுந்தோளணி நிகநிகவெனக்காதி　　ல்
ஈரெண்டுகுண்டலமெழிற்கொளார　　மூந்
திரண்டமாமணியுருண்டசைந்　　திட　அகி

சரணங்கள்

நீண்டஜடாமகுட நெடியகற்கடகமின்　　ன
நிகரிலாப்பணிஜொலிக்　　க
ஆண்டவன்றனைத்தானை வேண்டித்துதிக்குமன்பர்
அடுக்கடுக்காய்நடக்கவீரர்க　　ள்
படிக்கபூரிபேரியடிக்கத்தொனியுட　　ன்　அகி

லஞ்சலியஸ்தர்களாக மஞ்சனிகூத்தரு　　ம்
ஆனைசேனைநடக்க　　வே
என்சொற்படியல்லாமல் மிஞ்சிவந்தொருகன்　　னி
இதக்கமுள்ளவன்துதிக்கானிட　　ர்
எதிர்க்கும்வீரியம் வதைத்துப்போக　　வே　அகி

வில்லம்புகேடயமும் வீரவாளாயுதமு　　ம்
விருதுக்கொடிபறக்க　　வே
கொல்லும்நகரஞ்சாலை துலங்கிவுலாவும்வாச　　ன்
சூரரெவரையுதறிப்பொடிப　　ட
கூறுசெய்திடுந்தீரவீரிய　　ன்　அகி

ஐயனாரப்பன்சொல் விருத்தம்

கதிர்த்தோளுடையகாவர் காரனேசொல்லக்கேளாய்
யெதிர்த்தவீரியர்கடம்மை யிமையினிற்செயித்துவாட்டி
மதித்துமேமொலிகொண்டிந்த வையகமெல்லாமஞ்சித்
துதித்திடுஞ்சூரவீரதுரை தனையழைத்துவாராய்.

வசனம்

அடா திணித்தோள்களையுடைய காவற்காரனே எதிர்த்த வீரர் களை அஞ்சும்படியாக ஆக்ரமித்து பெலிகொள்ளும் பராக்ரம சாலி யான் வீரப்பதேவனை அழைத்துவாரும் பிள்ளாய்.

### வீரப்பதேவன் வருகிற விருத்தம்

கொடிபெறவேயம்பலத்தி லாடுமீசன்
கேசவனுமகிழ்ந்தளித்த வையன்பாதம்
அடிபணியுமன்பர்கண்மீ தின்பமுள்ளோன்
அடல்வாகுவல்லயமும் வாள்கடாறி
கொடியசிலைசுக்குமாந் தடியுமேந்தி
நிதிமிகுத்தபலபணிக ளலங்கரித்தே
வெடிபடவேயண்டரண்ட மதிரத்தாண்டி
வீரப்பதேவருமே வருகின்றாரே.



### வீரப்பதேவன்வருகிற-தரு-இ-ம்

### நொண்டிச்சிந்து

ஆணிமுத்துவீரதுரைவந்தார் நல்ல
ஐயனாருரைக்குந்துய்யமொழிக்கு
மாணிக்கமகுடமுடிவேந்தர் வந்து
வரிசையுடனேபணியும் சரசகெம்பீரன்
ஆரசேயூரகடகம் நல்ல
அணிமுத்துமணிமாலைப் பணிஜொலிக்க
வீரமுள்ளசூரர்கள்வாட வெய்ய



மீண்டுசெய்யும்பேய்பூதங்கள் கண்டுகதற
வரிச்சிலைகேடயம்வாளும் நல்ல
வளைதடிசக்கரம்பாலா வொளிருங்கட்டாரி
துரிதமுடன்விருதணிந்தே கையிற்
சுக்குமாந்தடியுடனே யுக்ரவீரன்
தட்டிஜல்லடங்கச்சைபூண்டு இந்தத்
தாரணியில்புகழ்பெற்ற வீராதிவீரன்
வெட்டிவேர்கதம்பம்வீச காலில்
வெண்டயஞ்சொலிக்க மண்டலங்கொண்டாட-தந்தனதனதன.

### வீரப்பன்சொல் விருத்தம்

தேவர்கள்பணிந்துபோற்றுந் தேவேந்திரன்மகிழுந்தேவி
ஆவலாய்பதமடைந்த வயிராணிதன்னைக்காத்தே
பூவுலகத்தைக்காக்கும் புண்ணியநாதாபோற்றி
வேவிடவரவழைத்த விதமெனக்கருளுவீரே.

### வசனம்

பொன்னுலகவாசிகளாகிய தேவர்கோனாக வழங்குந் தேவேந்திரனது மனதுக்கினியவளாகிய அயிராணிபெண் மங்கையைக் காத்தும் இவ்வுலகத்தையும் பாதுகாக்க வெழுந்தருளி யிருக்கும் புண்ணியமூர்த்தியே உனது பாதமலர் போற்றிபோற்றி தேவரீர் சிறியேனை வருவித்தவிதந் திருவாய்மலர்ந்தருள வேண்டுஞ் சுவாமி.

### ஐயனாரப்பன்சொல் விருத்தம்

அருமைவீரப்பாயிந்த வகிலலோகத்துளன்பாய்
தருபூசைகொண்டுவோங்குந் தாரணிதன்னைக்காக்க
வருகிறாளொருமின்தன்பேர் வாங்கியபூசைகொள்ளக்
குருகிநீயவளைவென்று கூறுவாய்பதிலெனக்கே.

### வசனம்

நெடியகடல்சூழ்ந்த இப்புவனமுழுதும் நம்மானிடரால் செய்யப்பட்ட பூசைகளையேற்று அன்னவர்களுக்கு யாதுங் குறையின்றிப் பாதுகாத்துவருகிறோம் இப்போது கங்கையென்னும் பெயரை வகித்த வோர்கன்னியானவள் தன்மகிமையை செலுத்தி வருகின்றாளாம் நீபோய் அக்கெங்கையை செயித்துவருவாய் வீரப்பனே.

### வீரப்பன் கங்கையம்மனிடஞ் சமர்செய்யல் தரு-இ-ம்

பல்லவி

அப்படிவருபவளாரிங்கே யவளை
யதஞ்செய்துவருகிறேன் பாருங்கள்

அநுபல்லவி

எப்படிவருகுவா ளெண்ணமில்லாமலே
வெட்டியிருதுண்டாய் வெட்டியெரிகுறேன்

சரணங்கள்

ஆலைக்கரும்புபோலாட்டுவேன் அவளைக்
காலனுக்கிரையாகக் காட்டுவேன்
கோலாகாலிதிரிசூலியென்றாலுமே
கொஞ்சத்தில்விடுவேனோ வஞ்சியான்படுவேனோ அப்

புலியைப்பூனைகள்கண்டஞ்சுமோ வீட்டி
னெலியைக்கண்ட தேனுமஞ்சுமோ
கெலிக்கவெண்ணங்கொண்ட கெம்பீரமறிகிறேன்
கதைகொண்டுவவளைநான் கதறவேயடிக்குறேன் அப்

கெங்கையேவுந்தனை கண்டேனேயிப்போ
பங்கப்படுத்தவெண்ணங் கொண்டேனே
யெங்குங்கீர்த்திபெற்ற வெழிலையழிக்குறேன்
யிப்போதேவெல்லுவேன் தப்பித்துக்கொள்ளுவாய் அப்

இதுவுமது விருத்தம்

கங்கையேவுன்னைப்போலக் கருத்தில்பேராசைகொண்டே
ரெங்குநான்கண்டதில்லை யெப்படிமிஞ்சிவந்தாய்
அங்கமுந்துடிதுடிக்க வதட்டியேவில்லைப்பூட்டி
பங்கமேபடுத்தவில்லிற் பாணத்தைச்சந்திப்பேனே.

வசனம்

ஆ ஆ ஒகங்கையே இக்கடல்சூழ்ந்த உலகின்கண் உன்னைப் போல வீறாசைகொண்டு திரிபவர்களை எங்கும்நான் கண்டதில்லை மேலும் நாமே வல்லவியென்றும் நமக்கு மிஞ்சினவர்களொருவருமில்லையென்று இருமாப்புகொண்டு மிஞ்சிவந்தாயன்றோ பளா பளா இதோ நிமைக்கொட்டுவதற்குள்ளாக எனது வில்லினிடமாக பாணங்களைப்பூட்டி ஆகர்ணபரியந்தமிழுத்து உனது உடலத்தை



சல்லடைக்கண்களாகச் செய்து பங்கப்படுத்துவேன் பாராய் கங்கையே.

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வீரப்பன் கூறிய உக்ரவார்த்தையைக்கேட்ட கெங்கையம்மனானவள் அதிககோபங் கொண்டவளாய் அடா துள்ளுநாளையே என்னடா தலைகீழாக விழுகிறாயென்று ஒருவருக்கொருவர் வாதமிடும் விதங்காண்க.

### கெங்கையம்மனுக்கும் வீரப்பனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்

கண்ணிகள்

துள்ளுகாளையென்றவர்க்கும் விள்ளவேபுலகில்வந்த
துடுக்கையடக்கவந்தேன்பாரடா
கள்ளத்தனமாகயிங்கே மெள்ளமெள்ளவந்தேனென்னின்
கருத்திலெண்ணுவதென்னபோடா
காரியமறிந்திடாமல் வீரியம்பேசாதேபோடா
நீரிலாததெய்வமுண்டோ மாரிலாதசெல்வமுண்டோ துள்

### வீரப்பன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

அண்டரும்நடுங்ககோலதண்டருக்குந்தெண்டனென்று
வச்சமற்றுப்பேசவந்தேனடி
மண்டலத்திலெனைவெல்ல வுண்டோவொருவராலாமோ
மார்க்கமறியாமற்செய்யுமடி
வையகமெல்லாமுண்டருளுந் துய்யாமனுமீசன்றந்த
வையனாலுப்பவந்த செயவீரனென்றெண்ணாமல் அண்

### கெங்கையம்மன்சொல்தரு-இ-ம்

கண்ணிகள்

மங்கைபாகனார்சடையிற் றங்குமந்தகெங்கையென்பேர்
மகிமைதனை நீயறிவதேதடா
எங்குநிறைந்தவள்நானே வுங்கள்வீரமறிவேனே
யெந்தனையெதிர்க்கும்வீரஞ்சூர
எப்படியுமுன்னைவெல்லுவேன் செப்படிந்தவீரமேக
வற்பமாய்நினைக்கவேண்டா மொப்பிலாதசெல்விநானே

வீரப்பன்சொல்-தரு இ-ம்

கண்ணிகள்

கோலாகலித்திரிசூலி மாலினிட கபாலியென்றே
குறித்துச்சொல்வதால் மனதஞ்சுமோ
காலகாலிபராஞ்சோதி நீலிமகிடாசங்கரி
கங்கைநானென்றாலுன் வீரமிஞ்சுமோ
கற்றமொழிபேசவேண்டா முத்தமகுலநாயகி
மெத்தசவுரியங்கூறிச் செத்துநீமடியவேண்டாம் கோலா

கெங்கையம்மன்சொல் விருத்தம்

எதிர்க்குவிறக்கமுற்று ளெப்படிவீரஞ்செல்லும்
பதறிக்கைசமர்தொடுத்தால் பார்க்கலாமெனதுதீரம்
வதறிக்கையோட்டங்கொள்ள வுன்னிடபடைகளெல்லாங்
கதறிக்கைசோர்ந்துவாடக் கணைகளைப்பொழிகுவேனே.

வசனம்

ஆ ஆ அடாவீரனே உலகத்தில் நம்மை எதிர்த்த எதிரி கண் திறக்கங்கொண்டால் வீரம் வெளியாகுமோ அதுபோல் நாம்பத றிச்சமர் செய்யப்புகுந்தால் அப்போது எனது தீரம்தெரியவரும் ஆதலால் உனது சேனைகளனைத்துங் கைசோர்ந்து மெய்சோர்ந்து வில் வேல்முதலிய ஆயுதங்களைவிட்டுக் கையுதரிக்கொண்டு ஓட்டம் பிடிக்கும் படியாகக் கணைகளைச் சோனைமாரிபோல் பொழிவேன் பாரடா.

வீரப்பனுக்கும் கங்கையம்மனுக்கும்-தர்க்கம்

தரு-நொண்டிச்சிந்து

மீறிவுக்ரகோபமிகுத்தேன் கங்கையேநான்
வில்லைவளைத்தேயிதோ பல்லைக்கடித்தே
காரிழையுன்வீரியமழிய நொடிக்குள்ளே
கண்டவர்திடுக்கிடவே கொண்டவிடிபோல்
காட்டிக்கணைமீட்டிவிடவே வாட்டியுனை
கண்டவர்நகைத்திடவென், துண்டத்தனத்தால்மீறி

கெங்கையம்மன் சொல் சிந்து

பாரெங்குமநடுங்க வில்வளைத்தேன்
பாணங்களைத்தொடுக்க நாணமடுக்க
வீரங்களடங்கிடவே-நொடிக்குள்ளே



விண்டலத்துதேவர்களுங்கண்டு துதிக்க
வெற்றிபெருஞ்சித்தமுடனே சுற்றிவந்த
மெத்தசேனைதத்தளிக்கவெற்றிவிடுவேன்பாரே.

வீரப்பன் சொல் சிந்து

விதிகுலக்கன்னியேகேளா-யிப்படிக்கொத்த
வீரியம்படைத்துவந்த காரியமேதோ
துதிபெறவந்தவளோ உலகத்தில்
துண்டந்துண்டங்களாக மண்டைச்சிதற
தூறிக்கணைமீறிவிடவே பரிவுடல்

கெங்கையம்மன்சொல்-சிந்து

துண்டுதுண்டாயற்றுவிழப் பண்டுஜாடுவேன்-விதி
இடிபடாவீரப்பனே நொடிக்குள்ளே
யெண்ணுதும்யெண்ணிமனங் குண்ணிவாடவே
தேடும்வகையறியாமல் வந்தெதிர்த்த
திண்டோளும்வல்லமையாவுங் கண்டுகளித்தேன்
தேடும்வகைகூடாயினி-ஓடிமறைந்தே
சேருமிடம்பாரடாநீ வீறுகொள்வையோ-நடு

வீரப்பன் கந்தார்த்தம்

நெடியசூலமும்வேலுடன்வில்லும் நீதாங்கிப்
படியில்வீரியஞ்செல்லவேவந்திடும் பாவையே
கடுகிதண்டமுமேந்தியே சினந்துகையோங்கி
முடுகிவந்துனையடர்ந்து நான்வீசி
மோதுவேனே தலைசிதறமானேநானே
மோதிவிட்டவடிமீதுபட்டிடவேதுமீறுவதேதுபோடிநீமோது

கெங்கையம்மன் கந்தார்த்தம்

பட்டிடவோங்கியதண்டமு முடிபடப்பாரதனைத்
தட்டிவிலக்கியுன்விருதுகள் பொடிபடத்தாக்கிகணை
கொட்டிநொறுக்கியேமழைபோற் சொறிந்ததிகோரமுடன்
வட்டவில்வாங்கியே யெய்யவருங்கணை
வாடிநானே-மதிகலங்கி-யோடிநானே
வாடிநிற்கவேதேடிவெற்றிகள்-நீடிகெங்கையும்பாடிநிற்கவே

பொது விருத்தம்

வீரனுமதிகலங்க வெகுண்டுடனையனுருந்
தாரணிதத்தளிக்கத் தனிச்சிங்கம்போற்கெற்சித்து

மாரனைப்போலவில்லும் வளைதடிகெதைவாளேந்தி
வாரணிகங்கைமுன்னே வருகிறதறிகுவீரே.

ஐயனாரப்பன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

ஆலமுண்டகண்டநஞ்சகாலனுமதிகலங்க
வாக்ரமித்தேவாயுதங்கள்தாக்கினார்
அப்படிப்பட்டவடன்னையிப்போதேகொல்லுவேனென்று
வதட்டிப்பதியைவிட்டேநீங்கினார்
காலாந்தருத்திரனைப்போலவேகடுகடுத்து
கண்டவர்திடுக்கிட்டேங்கநாயனார்
கங்கையாளொருகொடியிற் பங்கப்படவேயடிக்க
கத்திகேடயங்களெடுத்தோடினார்
மண்டலத்தவர்கடஞ்சத் தண்டமதுகரத்தேந்தி
வச்சிரக்கவசம்பூண்டு நீங்கினார்
மட்டில்லாச்சினமிகுத்து வெட்டியெறிகுவேனென்று
மாறுபாடாய்வீரபாஷைகூறினார்
தண்டையொடுங்கிண்கிணியும் வண்டயங்கலகலென
தாண்டியேநடந்து வீரங்காட்டினார்
சக்கரம்வளைதடியு விக்கவேயாயுதங்கொண்டு
தாரணியோரஞ்ச வில்லைப்பூட்டினார்

ஐயனாரப்பன் கெங்கைக்குச்சொல் விருத்தம்

சிவனுமேநகைபுரிந்து திரிபுரமெரித்தாப்போலும்
தவநிலைகளைதவிர்த்தகாமதகனன் போற்றாவிபுன்னை
அவனியோரறிந்துவாட வமோகதியாகச்செய்து
புவனத்திலுன்பேரில்லாப் போர்செய்யவந்தேன்பாராய்.

வசனம்

ஆடி மறைகுலகங்கையே முன்னம் ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவன் நகைசெய்து திரிபுரத்தை எரித்ததுபோலாம் தவநிலையைக் கலைக்கும்பொருட்டாய் புட்பபாணந்தொடுத்த காயனை நெற்றிக் கண்ணால் தகனஞ்செய்ததுபோலும் உன்னைத்தாவிப் படுத்துந் துன்பத்தைக்கண்ட விந்தபூமியோர்கள் வாட்டமுறும்படியாக வதோகதியாக்கி இப்புவனத்தில் வுனது பெயரில்லாமல் போக்கப் போர் செய்ய வந்தேன்பாராய் கங்கையே.



பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஐயனாரப்பனுரைத்த மொழியைக்கேட்ட கங்கை கூறுகின்ற விதங்காண்க.

கெங்கைக்கும் ஐயனாரப்பனுக்கும் தர்க்கம்

கண்ணிகள்

எரிப்பேனென்றனை யெதிர்த்துப்பேசியே
மெங்குநிறைந்திடுமையனே
விருப்பமாகவேபரிந்துரைத்திடுவேன்
வெகுண்டெழுந்திட்டமெய்யா
நெருப்பைவந்து ஈமொய்ப்பதுமுண்டோ
நீயாயெதிர்த்தென்மேல் வருவதுநன்றோ
நிகலாதுவேந்தன் வில்லையெடுப்பேன்
திருதிகென்றெரியுங்கணைகள் தொடுப்பேன்-எரி

ஐயனாரப்பன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

கணக்கில்லாதசரங்கள்வருகுது
கண்டுகொள்நீகெங்கையே
வணக்கமற்றுநீவந்தெதிர்த்திட்ட
வலுமையேதடிகங்கையே
துணிக்கவேபுனைச் சினமுமிகக்கொண்டேன்
தோகையுன்னிட வல்லமையைக்கண்டேன்
ஜோடுஜோடாக பாணமெடுத்தேன்
வாடியோடிடவாடிட விடுத்தேன்-கணக்

கெங்கையம்மன்சொல்-தரு-இ ம்

கண்ணிகள்

ஆனைசேனையுமோடி யொளிக்கவேசொல்
அமோகபாணங்களிலோ நான்பூட்டினேன்
நானிலங்கமஞ்சவெங்கணைமீறவும்
நாரியிகிருக்கெடுத்திதோமீட்டியே
வானவர்கண்டுஜெயஜெயவெனக்கூறவும்
வாடிவந்தகனமனமதுதேரவும்
வடவைக்கனலதுபோல்வாலிகள்ஜொலித்து
மான்புசேருபடைகள்வாடித்திகைத்திட-ஆனை

ஐயனாரப்பன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

கற்றவித்தைகள்பேசியெதிர்த்திடுங்கங்கைக்
கன்னியேயுன்மனம்வாடவே
பற்றியேதீக்கணைவருகுதுவருகுது
பறித்துன்றன்சிரமதை வீழ்த்தவே
சற்றுநேரத்திலுன்னுடலத்தைவாட்டியே
தையலேயுன்னையமனிடங்கூட்டியே
ஜடஜடவெனக்கூவிச் சரங்களும்வருகுது
குடகுடமெய்யினிற் குடல்கள்பிளருது-கற்ற

கெங்கையம்மன்சொல் விருத்தம்

அரிஹரபுத்ரதேவா வந்தணன்செல்வியென்றும்
பரிவிளமனமிலாமற் பாலகிதனையெதிர்த்த
நெறியலவென்றுகூறும் நீதியையகற்றிக்கிட்டி
வரிசிலையெடுத்துத்தூண்வரு மபஜெயமுனக்கே.

வசனம்

ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவனுக்கும் சொற்கமத்தியபாதாள மென்னு மூன்று லோகத்தையும் உண்டருளிய திருமாலுக்கும் புத்திரனுகவிளங்கும் மகானுபாவனே நீர் உலகின்கண் பிராமணஸ்திரீகளைக் கொலைசெய்ய லாகாதென்றும் சிறுபிள்ளைகளை எதிர்க்கலாகாதென்றும் நீதிமார்க்கமறிந்திருந்தும் சற்றேனும் இறக்கமில்லாமல் சமர்செய்ய வந்தபடியால் அபஜெயமடைகுவீரய்யனே.

ஐயனாரப்பன்சொல் விருத்தம்

வையகத்திற்பிறப்பவர்க்கு கியானமேது
வஞ்சமிலானென்று மனவுருகிகொண்டே
தையலரேயிதுவுனக்குத் தானேதோன்றச்
சராசரத்திலுற்றசெய ரறிகுவாயே
மெய்யழகியுன்ஜெனன மெடுத்தசீரும்
விதிகுலத்தில்கெங்கையென்று விளம்புவாரும்
பொய்யுரையாச்சேதி யிஃதின்னரென்று
பிரியம்வைத்தென்மீது வுரைசெய்குவாயே.

வசனம்

கேளும் கெங்கைநாயகியே பூலோகத்தில் ஜெனித்த மானிடர்களுக்குப் பூர்வக்கியான மில்லையென்பது யாவருக்குந் தெரிந்திருக்க



நீ என்னுடைய வரலாறனைத்துங் கண்டறிந்தவள்போற் கூறியது எவ்வகை அதன்றியும் இச்சராசரங்கள் தோன்றுதலையும் அழிதலையும் பகுத்துச்சொல்லி நீ சத்தியநெறி யுடையவளென்றும் வஞ்சகி யல்லவென்றும் முன்னமே பூரணமாக வறிந்திருக்கின்றேனுதலால் இனிமேல் உனது பூர்வஜெனனமும் இந்த ஜெனனத்தில் எவ்வூரில் எந்த பிராமணனால் வரப்பட்ட தேவதையும் இல்லறத்தைவிட்டு நீங்கித் துறவரம்பெற்று எங்களுடன் போராடுந்தன்மையை விபரமாய்ச் சொல்லுமம்மா கன்னிகையே.



கெங்கையம்மன்சொல் அகவல்

ஆரணத்தாலு மாகமத்தாலு
தேறுணப்பொருளாய் திகழுமப்பூதமாய்
ஓங்கியபொருளா மூமாமயேசற்கும்
பாங்குறுப்பன்னகப் பாயலோதனக்குஞ்
சேயாய்ஜெனித்ததோர் செல்வமேகேண்மோ
மாயாப்பிறவி மயக்கத்திலலையும்
மாந்தர்கடம்மால் மானிலமதனில்
ஆந்துயாதனு லகவிருட்செறிய
அந்தகன்றனக்கு வழிவிலாத்தொழிலாற்
சிந்தைமெலிந்தே சிவன்பாலுரைத்திட
வித்தகனென்னுமவ விமலனுமரித்தே
கற்றவார்சடையொளிர் கங்கையாமென்னை
மறைகுலப்பெண்ணாய் மானிலந்துதித்தே

பொறையிலாமாந்தர்கள் புத்தியைகலக்கவும்
துஷ்டதேவதைகள் துன்பத்தைபோக்கவும்
இஷ்டரைப்பறித்தவர்க ளின்பதளிக்கவும்
என்னரும்வினையெலா மீடுருவண்ணம்
புண்ணியம்பெருகிடப் பூமியிலுதித்தே
வடவேங்கடன்பால் வரமதைப்பெற்றே
திரமுடன்ரத்தித் திரும்புவயென்றே
விடைகொடுத்தனுப்ப வியன்கொளுமணியே
தடையிலாயானுஞ் சதுர்மறைக்குலத்தில்
வேதநாயகியெனு மேதரூபாற்பிணி
பிள்ளையில்லாத பெருந்துயரதனால்
வள்ளலேகங்கையை வணங்கிவந்தமையால்
பெண்ணுருவாகிப் பேசருங்கங்கையில்
அன்னவேமிதக்க வரிவையுமெடுத்தே
நாயகன்பாற்சொல் நலமுறுவேதியன்
ஞாபநன்னீரிற் றுலங்கியபண்பினால்
கங்கையென்று நாமகரணமேயளித்து
பொங்கமாய்வளர்க்கப் புனிதனேநானென
ஐந்தாம்வயதி லயற்பெண்களுடன்
விந்தைசேர்நதியில் விளையாட்டுபூசலாய்
வந்தவரிணங்கியே மறைந்தனள்கங்கையில்
முந்தியபெண்களு முதியவர்பாற்சொல்
தேடியேகரையினிற் றிகைத்துநிற்கையில்
நாடியேநானுமென் நலமெலாம்பகர்ந்து
தேற்றியேயவரைச் சீர்மனைக்கனுப்பி
நாற்றிசையும்புகழ் நாரணன்வாழுந்
திருப்பதியானைச் சீரகத்திருத்தியே
விருப்பமாய்த்தவங்கள் வேணநாள்செய்ய
மன்னனார்தமது கருத்ததுகளித்தே
திண்ணமாவரங்கள் ஜெயமுகவளித்தார்
வத்தவைநானு மினிப்புடனிருக்கையிற்
சாற்றுதற்கரிய சைவசுரமென்றும்
விட்டுணுசுரமெனும் விந்தைசேர்நோய்கள்
துட்டமாயென்னைத் தொடர்ந்தெதிர்பொழிகையில்
வினைகளையடக்க மீறியேகாளியும்
வனைவந்தெதிர்க்கையி லிருவரும்வெருண்டோ



அமர்செயப்புகுந்து ளவளையுஞ்செயித்தேன்
சமர்செயவந்த தானுமேயும்மைக்
கண்டவென்மனது களிப்படைந்தேனால்
அண்டர்கள்பணிய மையனேநாமும்
ஒருங்குசேர்ந்திருந்தே ரிற்றவெம்பிணிகளை
மருங்குறவிருந்து மானிலமதனில்
காப்புகள்கட்டிக் கன்னியராக
மாப்பிள்ளைமார்களாய் மாவேடங்கொண்டு
வேப்பிலைபிடித்தே வீதிக்குவீதி
சாப்பாடுகொண்டு சம்பிரமமாகவே
கூழுவார்ப்பித்துங் கும்பங்களேற்றும்
தாழ்விலாப்பூசை தானுமேநடத்தியும்
அந்தணர்தமக்கு வன்னதானங்களும்
பலவகைநடாத்திப் பாவங்கடீர
நலமாய்திருவிழாக்க நடத்தியபின்னர்
பாவாடைபோட்டுப் பரிமளகந்தமும்
பூவாடைகளைப் பொற்கரத்தேந்தி
சகலவன்பர்களும் வாத்தியத்துடனே
வெகுவிதவாத்திய வேடிக்கையாக
கங்கையில்விடுத்துக் களித்தெந்தன்கிருபை
தங்கியமானிடர் சந்தோஷ பெறத்
தீவினையகற்றிச் சென்மமீடேறப்
பாவங்கள்போக்கிப் பரகதிதாவே
கன்னியான்வந்தவென் கருத்தின்படிக்கு
என்னுடன்வந்தவர்க் கெழில்கொள்பூசைகளும்
தந்திடவந்தேன் தக்கதோர்நீங்கள்
எந்தனுக்குதவி யிருந்திடுவீரே.

ஐயனாரப்பன் சொல் விருத்தம்

அப்படியாவுன்பெருமை சொல்லக்கேட்டு
வானந்தசாகரத்துட்டோ யாதேனம்மா
வெப்படியுமுன்மகிமை யுலகிற்செல்லும்
யிடரின்றியுதவிகையச் சந்தோஷத்தோ
டொப்பிலாநாயகியே வொன்றுகேண்மோ
உடன்பிறவியென்றே வுளங்களித்தேன்
தப்பிலாவீரய்யன் சோபந்தீரச்
சந்தோஷமாகவரந் தருகுவாயே.

வசனம்

கேளுமம்மா கங்கையே பெறுதற்கரிய உனது மகிமையைக் கேட்ட நாங்களனைவருஞ் சந்தோஷமென்னுங்கடலில்மூழ்கி ஆனந்த பரவச ராளுமாதலால் இனியிக்கடல்சூழ்ந்த உலகின் கண் யாதொரு இடருமின்றி யுனதுபெருமை சொல்லும்படியாய் நாங் களும் உதவிசெய்கின்றோம் நாயகமே உனக்கோர்மனுவுண்டு அது யாதெனில் குற்றமற்ற குழந்தையாகிய வீரப்பன்சோபந் தணியும் படியாகச்செய்து சந்தோஷகரமாய் அவனுக்கு வேண்டியவரங்களை யருட்செய்வாயம்மா.

கெங்கையம்மன்சொல் விருத்தம்

அப்பனேயெழுந்துவாடா வழகுகண்மணியேவாடா
ஒப்பிலாமகனேவாடா வுலகெலாந்துதிக்கவாடா
மெய்புளவெண்ணீர்வேம்பு வீசினேன்வினைகளோட
செப்பினேன்வீரமுத்துச் செல்வனேயெழுந்துவாடா.

பொதுவிருத்தம்

வெண்ணீறுபட்டவுடன் வினைகளோட
வெகுண்டெழும்பிக்கண்விழித்துக் கடுகடுத்தே
தண்ணீரைக்கவருகின்ற வனலைப்போலத்
தாவியவனண்டபிண்ட மதிரத்தாண்டி
விண்ணோருமண்ணோருந் திடுக்கிட்டேங்க
வீரதண்டக்கரமுடனே யுக்ரங்கொண்டிப்
பொன்னனகங்கையைநான் வெல்வேனென்று
பேரிடிபோற்கொக்கரித்தே யெதிர்த்திட்டானே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் ஐயனாரப்பன் சொல்லிய வாய்மைக்கு மகிட்சிகொண்டவளாய்க் கங்கையம்மனானவள் தனது கொடுங்கணைகளால் தேகமுழுதுந் துளைப்பட்டுச் சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்திருந்த வீரப்பன்மீது வெண்ணீற்றையும் வேப்பிலைப்பத்திரியும்வீசி ஒப்பிலாக்கற்பகம்போன்ற அப்பனே எழுந்துவருகவென்று வாழ்த்தியமாத்திரத்தில் அவன் சோபம்நீங்கிக் கண்ணைவிழித்துப் பார்த்து தனக்கெதிரில் நிற்கும் கெங்கையம்மனை கண்டு அதிககோபங்கொண்டு கண்களில் நெருப்புப் பொறிகள்சிந்த நோக்கி அண்டபிண்டங்க ளதிரும்படியாய்த் தோள்கொட்டிச் சிங்கம்போல் கெற்சித்து வச்சிர தண்டத்தை



யொத்த ஓர்கதையைக் கையிலேந்தி கரகரவென்று சுழற்றி இப் பெண்ணாகிய கங்கையைக் கொல்லுவேனென்று குருகியதைக் கண்டு கங்கையம்மனுக்கும் வீரப்பனுக்குந் தர்க்கநேரிடும் விதங் காண்க.





வீரப்பனுக்கும் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு இ-ம்

கண்ணிகள்

வீரனேயுலகின்மிக்கதீரனே
வீரமாகவென்மேற் போர்செய்யமுடியாமல்
மாறுமயக்கஞ்செய்த மந்திரசாலிவாடி-வீர

கெங்கையம்மன்சொல் தரு இ-ம்

கண்ணிகள்

தங்கம்நீயே ரணமுகசிங்கம்நீயே
கங்கையென்றேயென்னைக் கருத்திலுணராமல்
பொங்கிமீறிவந்தால் பொறுக்கத்தானேவேண்டும்-தங்

வீரப்பன் சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

மிஞ்சவேண்டாம்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்
வஞ்சியவள்கெங்கை மாதாவென்றேயெண்ணி
தஞ்சமுமக்கென்றே சரணஞ்செய் துக்கொள்வேன்-மிஞ்ச

கெங்கையம்மன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

அச்சமேதுமணியுமென்றே-பிச்சையேது
அச்சமெனக்குண்டோ வடிப்பேதனையோட
வுச்சிதகெங்கையா ளேடாதேயெதிர்நில்லு-அச்ச

வீரப்பன்சொல்தரு இ-ம்

கண்ணிகள்

வந்துபாரும்என்றுவென்னை சிந்தைதேறும்
மைந்தர்செய்பிழை மாதாயொப்பதென்றும்
அந்தவிதத்திற்கு நொந்திடாமல்மீறி-வந்து

கெங்கையம்மன் சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

துள்ளவேண்டாம் அதிககோபங்கொள்ளவேண்டாம்
தெள்ளுமணியேசொல்லைத் தள்ளிநடக்கலாமோ
வள்ளற்செஞ்சடைதன்னி லுள்ளதெய்வம்நானே-துள்ள

வீரப்பன்சொல் விருத்தம்

தந்தைசொன்மிக்கமந் திரமில்லையென்றவ்வை
அந்தசொல்லாலேகோப மடங்கியேமனதன்பாகி
வந்தேனுனதுதிவ்ய மலரடிசரணமம்மா
சிந்தையிலன்பாய்மைந்தன் செய்பிழைபொறுத்தாள்வாயே

வசனம்

ஓ அம்மணி தந்தைசொன்மிக்க மந்திரமில்லையென்று ஔவையார் கூறியிருக்கும் நீதிச்சொல்லினாலே கோபத்தை மாத்திவிட்டேன் ஆதலால் எனது தாயாகிய உமது திவ்யசரணாரவிந்தங்களுக்கு வந்தனம் அடியேன்செய்த பிழையனைத்தும் பொறுத்துக்கொள்ளுவாய் அம்மணி.

மாரியம்மன்கங்கையம்மன்மீது சமர்செய்யவரும்பொதுவிருத்தம்

பகலவன்போல நவமணியாமகுடமின்னப்
பாரெங்கும்விலைமதியாய்ப் பணிகடம்மைத்
தகதகெனநிலவெறிக்க வலக்கரித்தே
தனுவில்வேல்வாளினுடன் சூலமேந்தி



மிகவதனிப்போற்றுதார் காலிமாலி
விண்ணவருங்கொண்டாட வடவமாடச்
ஜெகமுழுதுபணிந்தேத்து மாரியம்மன்
சினமிகுந்துங்கங்கைமுன்னே வருகின்றாளே.

இதுவுமது-தரு-இ-ம்

பல்லவி

வாசவன்மிகத்துதி பேசும்ப்ரகாசமதி
மகம்மாரியம்மன்வந்தாள் ஜெகப்ரகாச-மகம்

அநுபல்லவி

மாசில்லாதநவமணி மகுடம்பளபளென்ன
வஜ்ரமிழைத்தகொந்தள வோலையுமின்ன

சரணங்கள்

கரகபாலிமாலி யுரபூஷணிநீலி
கடகம்பளபளென்னவே
சரிகையுடுக்கைவாளுஞ் சூலங்கரத்திலேந்திச்
ஜோதிமிகுத்திடுதந்தமிலங்கிடவாதுதொடுத்திடுஞ்சூர்கலங்கிட

எங்குஞ்சிறந்தரி சிங்கவாகனமேறி
யிணையில்லாத வீரர்சூழவே
மங்களாகரி நெடுமாலின்சகோதரி
மண்டலமெங்குமெழிற்றுதிபேச அண்டையில்மாதர்கவரிகள்வீச

தண்டைகொலுசும் வீரகண்டாமணியொலிக்க
சகலவாத்தியங்கள் முழங்கவே
தெண்டனிட்டருகினிற் கொண்டாடுபூதப்ரேதம்
தேசமெச்சிடுநற்கங்கையைமீறி மாசிலாதவதியரிபுரமாரி வாச

மாரியம்மன்தனது காவல்காரிக்குச்சொல் விருத்தம்

பார்த்தவர்மனங்களிக்கும் பண்புகாவலியேகேளாய்
போற்றவேயுலகமெங்கும் பூசைகொண்டிருக்குங்கீர்த்தி
மாற்றவேவந்தகெங்கை வல்லமையறியவேண்டிக்
காத்தவராயன்றன்னைக் கடுகியேயழைத்துவாராய்.

வசனம்

வாராய் எனது ஏவற்கிசைந்த காவலியே இதுவரையில் இக்கடல்சூழ்ந்த உலகமெங்கு மென்னைக் கொண்டாடி பூஜித்துவருங்

கீர்த்தியைப் பெற்றிருந்த எனதுபெருமையை மாற்றுவதற்காக வந்திருக்கும் கெங்கையினுடைய சவுரியத்தை யறியவேண்டி என் மைந்தனாகிய காத்தவராயனை யழைத்துவருவாய் பெண்ணே.

பொது விருத்தம்

மண்டலமெலாம்வணங்கும் மாரியம்மன்
மகிழ்ச்சியுடன்தானழைத்த சேதிகேட்க
குண்டலங்கள்தளதளென்று செவியிலாடக்
கொடியபிணிப்பேய் பூதங்கதறியோட
தண்டமுடன்சிலைவேலும் வாளுமேந்தித்
தரணியுளோரெவர்களுமே பணிந்துபோற்றக்
கண்டவர்களதிசயிக்கக் காத்தமுத்து
கலகலெனும்வொலியுடனே வருகின்றானே.



காத்தவராயன் வருகிற-தரு-இ-ம்

பல்லவி

கருமொழியுமகம் மாரியம்மனளித்த
காத்தவராயன் வந்தான் உக்ரமிகுத்த-காத்த
தாரணியிலெங்குமோங்கும் சர்வபரிபூரணி
தாயுமெனக்குதகுமாயன்சகோதரி



நேயமுடன்பணியுந் தூயர்தமக்குநல்ல
வட்டச்சிலையுடனே வடிவேற்கேடயமண
வாடைச்சுகந்தம்வீசவே
எட்டுதிசைநடுங்க யீட்டிவல்லமைப்பூட்டி
எங்குமோருமஞ்சச் சங்கமதைமுழங்கிப்
பொங்கமதாகவே தங்கச்சிரோன்மணி கரு

ஜல்லடமுங்கச்சையுந் தகுமிடையில்வரிந்து
தனிவிருதுகள்கூறிஜய
சொல்லுஞ்சொகுசுடனே பல்லைக்காட்டிநகைத்து
துன்னும்பலமணிமின்னதேகத்தில்
மன்னுமன்மதன்போல வுன்னிதக் கரு

காலுக்கிசைந்த வீரகண்டாமணியொலிக்க
கடகம்பளபளென்னவே
மேலுக்கிசைந்தநல்ல வியன்கொளுத்தரமாட
மெத்தவேமாதர்கள் சித்தமயங்கிட
வுத்தமவன்பர்கள் பத்திபுரிந்திடக் கரு

காத்தவராயன்சொல் விருத்தம்

திரிசூலமூலிகாளி ஜெகமெலாநிறைந்தசூலி
அரிசகோதரியேயுந்த னரவிந்தமலர்த்தாள்போற்றி
பிரியமாஎன்னைக்காக்கும் புண்ணியவதியென்றாயே
பரிவுடனென்னையழைத்த பான்மையையருட்செய்வாயே.

வசனம்

ஆதிமத்யாந்த ரகிதனாகவிளங்கும் மாயன்சகோதரி மகம்மாரி திரிசூலி கோலாகலி நீலிகபாலி நிறைந்தபஞ்சாட்சரி உனது உபயபாதாம்புயங்களுக்கு அநேகவந்தனம் அம்மணி அடியேனைப் பரிவோடுமழைத்த காரணத்தைப் பகர்ந்தருளவேண்டுந் தாயே.

மாரியம்மன்சொல் விருத்தம்

கட்டழகுடையவேந்தன் காத்தவராயாவாழி
மட்டிலாயுலகிற்கொண்ட வண்மைசேர்த்திடப்போகப்
பட்டிணந்தனிலேவந்த பார்ப்பாரக்கன்னிதன்னை
அட்டியில்லாமல்வெற்றி யடைந்துநீவருகுவாயே.

வசனம்

வாருமப்பா பெறுதற்கரியமைந்தனே இதுபரியந்தம் நமது பெயரைச்சொல்லி இவ்வுலகமெங்கும் நெறியுண்டாக வாய்மூடிப் பூசையேற்றுவந்த பெருமையைப் போக்கும்படியாய் இப்போது பிராமணகுலத்திற்றோன்றி கெங்கையெனப் பெயர்பூண்ட ஓர்கன்னியானவள் வந்திருப்பதால் நீசென்று அவளை செயித்துவரக்கடவாய் அப்பனே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப் பிரகாரம் மாரியம்மனானவள் தனதுகுமாரனாகிய காத்தவராயனுக்கு கெங்கையைப்பொருந்திச் சமர்செயித்து வரக்கடவையென்று விடை தந்தபோது அக்காத்தவன் மிகவுங் கோபங்கொண்டு வருகையில் அவனைக்கண்ட கங்கை தற்கஞ்செய்யும் விதங்காண்க.

காத்தவராயனுக்கும் கெங்கைக்கும்தர்க்கம் தரு-இ-ம்

கண்ணிகள்

வாரும்வாரும்கெங்கையே-என்னுடவீரம்
பாரும்பாரும்கெங்கையே
சீரும்புகழ்படைத்த மாரியம்மனளித்த
சேயன்காத்தமுத்தென்றால் வாய்மூடுமுலகெங்கும்
செல்லுமேயிதோ வில்லைவளைத்தேன்
நல்லதுன்றனைக் கொல்லநினைத்தேன் வாரும்

கெங்கையம்மன் சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

கேளுங்கேளுந்துண்டனே-நல்லதுசற்றே
தாளுஞ்செய்கிறேன்தெண்டனை
கோளறிமுன்யானைக்குட்டியைப்போலெதிர்த்துக்
குதிக்கின்றாயேதடா மதித்துப்பாராமலே
குந்தியிருக்கவே பற்றினேன்சூலம்
அத்தன்மெச்சிடு முத்தமியெனக் கேளு

காத்தவராயன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

என்னபெருமைபேசுறாய்-பரமன்மெச்சுங்
கன்னிநானென்றேவிசுறாய்



சின்னவனென்றேயெண்ணி யென்னைநீமதியாமல்
சிந்தைதுணிந்துவந்தா யெந்தபலத்தினாலோ
சினமூற்றதாலெந்தன் தநுவில்நாணேற்றி
மனதிலைநாணவே கணைவாளிகளெய்குவேன் என்

கெங்கையம்மன் சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

ஏதடாசிறுபையனே-இத்தனைகோலம்
வாதடாவருகையிலே
மாதடாயெனக்கென்ன வல்லமையறிதாமோ
மாற்றியுந்தனைக்குடி யேற்றுவேனெமபுரி
வந்துயெனதுகையால் னொந்திடவேவேண்டாம்
வுந்தனைவெல்வதற் கெந்தனுக்கரிதோசொல்

காத்தவராயன்சொல் விருத்தம்

வீண்மொழிபேசவேண்டாம் மெல்லியேபெண்பிள்ளைக்கு
சாண்பிள்ளையென்றாலந்த வாண்பிள்ளைதனம்வராது
காண்பைநீஉனதுவீரங் கைக்கிணையொருவருண்டோ
பூண்பணிசிரத்தைக்கொய்ய பூட்டினேன்பாணம்பாராய்.

வசனம்

ஆ ஆ பளாபளா நல்லது கெட்டிக்காரிதான் ஓ கங்கையே நீ என்முன்னே நின்று வீணான காரியங்களைப் பேசவேண்டாம் சாண்பிள்ளை யென்றாலும் ஆண்பிள்ளையினுடைய வீரம் பெண்பிள்ளைக் குண்டாகா தென்னும் பழிமொழி யறியாயோ அதுபோல் எனதுவல்லமையினால் உனதுசிரம்வேறு காம்வேறாகக் கண்டிக்கும்படியாய் பாணப்ரயோகஞ் செய்கிறேன்பார்.

காத்தவராயனுக்கும் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு

பாணம்பூட்டினேன் பிறைமுகபாணம்பூட்டினேன்
பாணம்பூட்டிபரக்கடிக்குஞ்செய்தி
பண்ணவராதிமண்ணோருங்கண்டேகித்
தானுவுனக்குத்துணைவந்தபோதிலுந்
தத்தளிக்கச்செய்வேனுக்ரவில்வளைத்தே பாண

கெங்கையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

வீரமேதடாவுனக்கிந்த-வீரமேதடா
வீரமேதடாவெறுங்கையனேபொய்யனே
வெற்றிக்கொள்ளவுன்னாலெப்படிமுடியும்
ஆரவாரமிங்கேயறியாமற்செய்குறாய்
ஆர்துணைவந்தாலும் பாருனைக்கொல்லுவேன் வீர

காத்தவராயன்சொல்-தரு

கண்ணிகள்

கொல்லத்துணிந்தேனேபாரிச்சனத்தில்கொல்லதுணிந்தேன்
கொல்லத்துணிந்தேன் விதிக்குலகோதையே
கோத்திரத்திலுனை வீரங்கள்பேதையே
பல்லைக்காட்டியுனை கெஞ்சவேசெய்குவேன்
பருதிபோல்வாளியு மோகமாய்ப்பெய்குவேன்

கெங்கையம்மன் சொல்-தரு

கண்ணிகள்

ஏதுகாலமோவுனக்கிது யேதுகாலமோ
ஏதுகாலமோநீவதைப்படவென்றால்
எரிக்கணையென்றூர் பொசுக்குவேன்பாரடா
நாதன்சடையிருப்பதறியாயோ
நச்சுநச்சென்றேகவிலாதடாபேயா ஏது

காத்தவராயன் சொல் தரு

கண்ணிகள்

என்னகாலமோ மடிந்திடவென்னகாலமோ
என்னகாலமோதென்னோ டெதிரிட்டுப்பேசுறாய்
பிறப்பவளாதலா லேதோகைவீசுறாய்
சின்னவனென்றுமதித்தாயோ நீயென்னைச்
சேதிக்குறேனினோ பேதிக்குறேன்பாராய்

கெங்கையம்மன்சொல்-விருத்தம்

சிங்கவாகினி மாரியம்மன்றந்தச்
செல்வனெனுங்காத்தமுத்தே சொல்லக்கேளாய்
கங்குன்மதிதனைவெல்லக் கண்டதுண்டோ
கதிரவனைப்பனிக்கூட்ட மெதிர்ப்பதுண்டோ



செங்கருடன்றனையரவம் வெல்வதுண்டோ
ஜெகமதனிலென்னை வெல்லுந்தீரருண்டோ
மங்களமாயென்னை யொருதாயென்றெண்ணி
மலரடியைப்பணிந்து நலம்பெருகுவாயே.

வசனம்

ஆ ஆ உலகின்கண் சிங்கவாகனத்தில் ஆரோகணித் திலகா நின்ற மாரியம்மன்றந்த காத்தவராயனே சந்திரகிரணத்தின்முன் இருட்கூட்டம் பொருந்துமா ஆயிரங்கிரணத்தோடுங் கூடிய ஆதித்த னென்னுஞ் சூரியனை பனிக்கூட்டம் வெல்லுமா திருமாலுக்கினிய வாகிய செங்கருடனைச் செவியென்னும் பாம்பு எதிற்குமா அது போல இந்த பூமண்டலத்தில் என்னை வெல்லத்தக்க வீரிய முண்டோ ஆதலால் உனதுதுன்மதியை விடுத்தென்னை தாயகம் போல் உன்னி எனதுபாத பத்மங்களைப் பணிந்தால் நன்மையை பெறுவாயடா காத்தமுத்தே.



காத்தவராயனுக்கும் கெங்கையம்மனுக்கும்-தர்க்கம்-தரு

கண்ணிகள்

வீராதிவீரனானே கங்கையேயுன்னை
மீறிப்பறக்கடிப்பேனே
பாராய்மதியிலாமற் பாதம்பணியச்சொன்னாய்
பற்றுமிந்தகணைகளாலே வெற்றிகொள்வேனிமைப்போதில்

கெங்கையம்மன்சொல்தரு

**கண்ணிகள்**

அஞ்சாதேகெங்கைஞனே ஆங்காரத்துடனுன்னைப்
பஞ்சாய்ப்பறக்கடிப்பேனே
வஞ்சியெந்தன்கைகணைக்கு மிஞ்சுஞ்சரங்களுமுண்டோ
வாட்டிக்கணைபூட்டியிதோ வோட்டுவேகமன்பதிக்கு அஞ்

காத்தவராயன்சொல் தரு-இ-ம்

**கண்ணிகள்**

சுக்குமாந்தடியெடுப்பேன் கங்கையேயுன்னைச்
செக்கைச்செக்கையாயடிப்பேன்
திக்குவேறேயில்லையென் மிக்கபுகழ்கொண்டுவந்தாய்
தேசமெங்கும்பேசத்துதி வீசியேபறக்கடிப்பேன்

கெங்கையம்மன்சொல் தரு-இ-ம்

**கண்ணிகள்**

தண்டங்கரத்திலெடுப்பேன் கரகரவென்றே
நின்றுசுழட்டியேவிடுப்பேன்
மண்டலமும்விண்டலமும்கண்டேநடுங்க
வாடிப்பயந்தோடிடவே நாடியேவுக்கிரங்கொண்டு தண்ட

காத்தவராயன்சொல் கந்தார்த்தம்

சக்கரஞ்சூலம்வேலுந் தனிக்கதைபிண்டிபாலம்
மிக்கவாயுதங்களோடும் வேண்டியவிருதுபூண்டும்
கைக்கிணையில்லையென்று கருவிக்குங்கங்கையாளே
உக்கிரகோபங்கொண்டு
ஓங்கினேனே ஆயுதங்கையிற்ருங்கினேனே
தேங்கித்தேங்கியுந்தன் சிந்தைதிகைத்திட
வாங்கிவாங்கிக்கணை வந்துமிகுத்திட ஓங்கி

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்

வையகம்போற்றுகின்ற மகம்மாரிமைந்தனென்றே
ஐயமில்லாமலென்னோ டமர்செயுமகனேகேளாய்
கையிளுலாகுமோடா கடிந்தமர்புரியவந்தாய்
செய்யவேவேணதுன்பம்



தீரமுண்டுஉந்தனைவெல்ல வீரமுண்டு
காரியமறியாமற் காத்தவராயனே
மாரியின்சுதனென்றே மனமில்லைபுனைக்கொல்ல தீர

காத்தவராயன்சொல் கந்தார்த்தம்

நலமிகுமொழியுரைத்த நங்கையேகங்கையாளே
வலதிலாவின்படின்று மனநிலைகண்டுக்கொண்டேன்
பலபலகணைகள்சிந்திப் பாரெலாமதிசயிக்க
கலகமதுமிகநீகொள்ளச்
ஜாடுவனேஇரண்டு துண்டாய்ப்போடுவேனே
நாடுநகரமெல்லாம் நற்றுதிகொண்டநீ
வாடும்படியிங்கே வந்தகப்பட்டாயே

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்

கன்னியென்றெளிதாய்ச்சொன்ன காத்தவராயாகேண்மோ
உன்னையுமறிவேனுன்ற னுலகந்தாயானமாரி
தன்னையுமறிவேனெந்தன் சங்கதியறியாய்நீயும்
என்னிடமகிமைகாண
எண்ணினேன் மணிமந்தரம்பண்ணினேனே
வெண்ணீற்றைறவீசிட வீரமொடுங்கிடவே
குண்ணிவாடநீயுங் கொஞ்சம்பிரயோகித்தேன் எண்ணி

பொது விருத்தம்

கங்கையேவியமாயத்தாற் காத்தவராயன்சோர
அங்கமுந்துடிதுடித்தே யாக்ரமித்தெழுந்துசீறி
சிங்கவாகனத்திலேறி திரிசூலப்படைகளேந்தி
மங்கையாங்கங்கைமுன் மாரிவந்தெதிர்த்திட்டாளே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கங்கையம்மனை வள் தன்னுடனமர்செய்துவந்த காத்தவராயனுக்கு எத்தனையோ வித நன்மைசொல்லியும் அவைகளை அசட்டைசெய்து மீறுவதைக் கண்டு கோபங் கொண்டவளாய்த் தனக்கு கைவசப்பட்டிருந்த மணிமந்த்ர சித்துகளிற் சிலவற்றையவன்மேற் றூண்டியபோது அதனால் மெய்சோர்ந்து சாவுக்குச்சரியான மூர்ச்சைகொண்டு நிலத்தின்மேற்சாய அதைக்கண்ட அவன் அன்னையாகிய மகம் மாரி துடிதுடித்துக் கோலங்கொண்டு சூலப்படை முதலிய வாளா

யுதங்களேந்தி அண்டம்நடுங்க கெற்சனைசெய்து கங்கைக்குமுன் வந்துநின்று போர்புரியும் விதங்காண்க.



மாரியம்மனுக்கும் கங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு

கண்ணிகள்

ஆரடிநீவாடி கங்கையேயிந்த
வமர்களந்தனில்மிகச் சமர்புரிந்திடுபவள்
ஆரடியுலகெங்குந் தீரஞ்செலுத்திடவே
ஆரைகொண்டுவந்தேனடி உன்னைநானும்
அறிவேனறிவேனடி கெருவமிகமிஞ்சாதே
நேசங்கொண்டுவந்தேனடி
ஆட்டியேபம்பரம்போலே வாட்டியேநிமைப்பொழுதில்
காட்டியேஎனதுவீர மோட்டிவிடுவேனேயுன்னை ஆரடி

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

மறைக்குலகன்னிநானடி-நல்ல
வருமைமிகுத்தேயிவ் வுலகோசொல்கரிய-மறை
இறையவனர்மகிழுந் தரைபுகழ்கங்கைநானே
யின்பமுற்றுவந்தேனடி தீரத்துடனே
யெண்ணியெண்ணியே மனதிலெந்தனையறிந்திடாமல்
தெம்புகொண்டேவந்தேனடி
முந்திவந்தசுதனைப்போல் நொந்துநீமயங்கிடவே
யெந்தனையெதிர்த்துளம்வெந்துயேன்வீணாகப்போராய்-மறை



மாரியம்மன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்

சீதரனர்தங்கைநானடி திசைசூழ்ந்த
ஜெகமெலாம்கொடிபெற மிகத்துதிபரவியநீத
வேதியன்குலந்தன்னில் மாதேநீபிறந்தவள்
வீரர்களுந்தனுக்கேதடி மிகுவகோர
வெகுவிதவினையுடனே வியன்கொள்மகிமைகாட்டுந்
தீரமுந்தனுக்கேதடி
மீறியேவநுங்கணைகள் மாரியேமுடுக்கி
பாரில்விழுந்திடவுன்னைக் கூறுகூறாசெய்வேன் சீதர

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

எல்லாமறிந்தநானடி யிகந்தனிலே
யென்னைவந்தெதிர்த்தவர்க் கிருக்குமனோதிடங்கள்
வல்லோர்களும்வணங்க நல்லோருந்துதிக்க
வயங்குங்கீர்த்திபெறவந்தேன் இப்புவிமீது
வாசமாகவேஎன்னுடன் நேசமதுசெய்யவந்தவன்
தளருதவாய்மைதந்தேனே
மண்டிச்சமர்செய்குவோரைத் தண்டிக்கின்றவிதமுண்டு
அண்டக்கோபமுடனே கொண்டேனேதநுகரத்தில் எல்

மாரியம்மன்சொல் விருத்தம்

பாரில்வாழ்மாந்தராதி பண்புளதேவரெல்லாம்
மாரியேதெய்வமென்று மகிமைநீயறிந்திடாமல்
வீரியஞ்செலுத்தவந்த விதிகுலப்பெண்ணேயுன்னைக்
கூறியவாளினாலே கொல்லுவேன்வந்துபாராய்.

வசனம்

ஆ ஆ அடிமறைகுலத்துதித்த கங்கையே நெடிய கடல்சூழ்ந்த இப்பூமியின்கண்ணுள்ள மானிடர்முதற் றேவரெல்லாம் மாரியே தெய்வமென்று புகழும் எனது மகிமையை நீ யோசியாமல் ஏதோ வுனது அரியாத்தனத்தால் வீரியங்காட்ட எண்ணமுற்று யாதலால் இதோ எனது பிரகாசம்பொருந்திக் கூரோடுங்கூடி யிருக்குஞ் சந்திராயுதத்தினால் உன்னைக் கொல்லுவேன் வந்துபாரடி கங்கையே.

மாரியம்மன்சொல்-ஓரடி தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

மூத்துமாரிநானேசொல்லும்
மூதண்டங்களுந்தீதண்டாதொளிர்
கோதண்டன்குலவுஞ் சோதரியெனும் — முத்து

எத்தலமும்புகழுமெனக்கிணை சொல்லப்போமோ
வெழிற்கங்கையேநீயென்னை யெளிதில்வெல்லவுமாமோ
பித்துகொண்டறியாமற் பிடித்தாய்கரத்தில்வில்லை
பேசாமலோடுவாயேற் பின்வருமோவிததொல்லை

பெலங்கொண்ட பிறைமுகக்கணைபதனாலே
நலங்கண்டவந்த னல்லுடமுமண்மேலே
பிண்டுவிழுந்தேயிலங்க வண்டர்கள்கண்ணீர்கலங்க
அண்டமனைத்துங்குலுங்க வெண்டிசையென்சீர்துலங்க
பேதைவேதனையகி விழுந்தழுஞ்
சேதிகேட்டியாவருந் தியாவருமடிதொழும் — முத்து

வரிச்சிலைதொடுத்தேனே கங்கையைவெல்ல
வாளிகள்விடுத்தேனே
நரித்திரள்களுடனே நாயும்பேய்பூதங்களும்
நன்றுயினைப்பொசித்தே நடிக்குஞ்சங்கீதங்களும்

இருச்செவியினுங்கேட்டேயிரும்புலியெங்குங்கோலம்
யெழிலுறவேதிரிவேனுனக்கிந்தகாலம்

கெங்கையம்மன்சொல் ஓரடித்தரு-இ-ம்

பல்லவி

கங்கைநானென்றேபாரடி-ககனர்பணி
கங்கைநானென்றேதேரடி

சங்கரனார்சடையிற் றங்கும்படியெனக்கு
சந்ததமுமுண்டெனத் தரணிகொளுமுனக்கு
அங்கமேதுசுதனை லருப்புண்டநிருமூடி
ஆரென்றெண்ணினாய் நல்லதென்னெதிர்வாடி

அறங்கொண்டுயிந்த வகிலத்துள்ளவர்வினை
திறங்கொண்டுயிந்த வகிலத்துள்ளவர்வினை



அற்பமாகவேயெண்ணி விற்பிடித்தாயெதிர்நண்ணி
ஆயன்வந்தாலுந்துணையால் நேயஞ்செய்வேனேயிணையாய்
அந்தரக்காத்தாடிபோலே முந்துமெந்தன்கணையாலே
ஆவியலைந்திடச்செய்யும் மூவிலைச்சூலங்களெய்யும்

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாச பதியாகிய சந்திரசடாதர மூர்த்தியினது சடாடவியிலிலங்கும் கங்கையம்மனும் ஸ்ரீவைகுந்தநாதனென்னும் மாயவன் சகோதரியாகிய மாரியம்மனும் லோகாலோகங்க ளெல்லாம் நடுங்கும் படியாய்ச் செய்யுஞ் சமரைக்கண்டு அச்சமுற்றவராய் அவனை சமாதானஞ் செய்யும் பொருட்டு திருமால் வருகிறவிதங் காண்க.

இதுவுமது விருத்தம்

அடவுளமாரியென்னு மருமைசேர்கெங்கையென்னுந்
திடமுளயிருவருந்தான் செய்சமர்நலமோவென்று
கடுகியேதேவர்சூழக் கரத்திற்சங்காழியேந்தி
வடமலைவெங்கடேசன் வந்தவர்க்குரைசெய்வாரே.



திருமால்சொல்லுந்தரு- இ-ம்

பல்லவி

தங்கையேமாமறைக் கங்கையேநீங்கள்
சமர்செய்யலாகுமோ நில்லுங்கள்

அநுபல்லவி

சங்கப்படைகளெல்லா மென்கையிற்றருங்கள்
சினம்விடுத்தேயன்பாக மனம்வைத்துவாருங்கள் — தங்

சரணங்கள்

முத்துமாரியுந்தன் சடைதனிலேவாழும்
மூர்க்கமுள்ளநங்கைநீதானும்
சுத்தபகீரதி கூறுநதிவரநதி
சொல்லுநாமக்காரி தூய்மறைக்குலமாதே — தங்

கன்னபுரமாரி யன்னமேயிருவருங்
களித்துவொருமிக்காதேனின்மே
வன்னியேந்துயீசன் வரத்தினாலேவந்து
வண்மைசேரும்புண்யம் வழங்கச்செய்யவந்த — தங்

சண்டனார்தொழின்மிஞ்சக் கொண்டதனாலதைக்
சங்கரனாருமேகண்டனர்
கண்டித்தேதுண்டரைக் கார்த்திடவன்பரை
காசியதனில்வந்த மாயக்காரியிவள் — தங்

இதுவுமது விருத்தம்

அம்மணியிவளோகெங்கை யரன்செயலாலேவந்து
நம்மிலுமொருவளாக நமன்தொழிலடக்கவந்தாள்
செம்மையாயிவளைவேண்டிச் செகமெலாந்தொழவேண்டி
யும்மிடம்வந்தாளம்மா வுளங்களித்திருந்திடீரே.

வசனம்

கேளுமம்மா தங்கையே பூமியிலக்ரமங்கள் மிகுத்ததால் நமனுக்கு வேலையதிகமாகி வருந்த அதைக்கண்ட யீசன் கெங்கைக் கருள்செய்ய அதுபோல் பூலோகத்தில் பிர்மகுலகெங்கையென்று திருப்பெயர்கொண்டு என்னிடத்தில் வேண்டிய வரங்களைபெற்று சர்வபீடைகளையும் வசப்படுத்தி காளியம்மன் ஐயனார் முதலானவர்களையும் வசப்படுத்தியபின் உன்னிடம் வந்தவளாதலால் நீயும்



உளமகிழ்ந்து வொழுங்குபட்டு நடப்பாயாகில் இவள் பெயரைச் சொல்லி மானிடர்கள் நம்மையெல்லாங் கொண்டாடுவார்கள் இது உத்தமமானகாரியம் அதன்பேரில் நாமனைவருங் கூட்டிப் பூலோகத்தாருக்கு நற்சுகந்தருவோமம்மா தங்கையே.

மாரியம்மன்சொல் விருத்தம்

அன்புசேர்கங்கைமீது வண்ணாவுன்பாதம்போற்றி
அன்புள திருமொழிக்கு விடவுறலுண்டோவோர்கால்
உம்பர்நாயகனேயிந்த வுத்தமியாள்மனைக்கு
நம்பினோர்க்கருளும் நாடவேசெய்குவீரே.

வசனம்

சரணம் சரணம் அண்ணாவே உமது திருவாக்கிற்கு பதில் வாக்குமுண்டோ கெங்கையம்மன்மீது பேசுதற்கரிய பிரியமுற்றனதலால் யாவரும் அவள் அழகியமனைக்கு எழுந்தருளவேண்டும் அண்ணாவே.

திருமால்சொல் வாழிவிருத்தம்

பத்திபுருந்தங்கையரே வாழிவாழி
பாசமுடன்கெங்கையம்மன் றானும்வாழி
வைத்தபில்லிசூன்யமுடன் குலநோவாம்
வாதபித்தசீதசுரம் பலவுநீக்கி
புத்திரமித்திருடனே சம்பத்துண்டாய்
பூலோகத்துள்ளவரும் வாழ்வாரம்மா
சத்திமகம்மாரி கெங்கையிருவருந்தான்
சந்ததமுங்களிப்புடனே வாழ்குவீரே.

108905

கெங்கையம்மன் நாடகம்
முற்றிற்று.

O4, 892 MKP, G
N54

உ

# மங்களம்

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்

கெங்காபவானியென்னுங் கருணாகடாக்ஷிக்கு
மங்களம் ஜெயமங்களம்
சங்கரனாருளுஞ் சதிர்கொளைங்கரனுக்கு
மங்களம் ஜெயமங்களம்
சோமனைத்தரித்தொளிய சுகுணரஞ்சிதனுக்கு
மங்களம் ஜெயமங்களம்
வமர்முற்றிலகும் வரைராஜபுதல்விக்கு
மங்களம் ஜெயமங்களம்
துன்னுமயில்மேல்வருஞ் சுப்பிரமணியற்கு
மங்களம் ஜெயமங்களம்
மன்னும்வள்ளி தெய்வயானையிருவருக்கு
மங்களம் ஜெயமங்களம்
வண்ண மரைகல்யாணி வடவேங்கடத்தாருக்கு
மங்களம் ஜெயமங்களம்
தன்னுலவுங்குழற் றையலலமேலுக்கு
மங்களம் ஜெயமங்களம்
மாமறைகடமக்கு மன்னும்புவிபினோர்க்கு
மங்களம் ஜெயமங்களம்
நேயமுடனேகெங்கை நீள்புகழ்படித்தோர்க்கும்
மங்களம் ஜெயமங்களம்

மங்களம் முற்றிற்று.

திருமகள்விலாச அச்சு நிலையம், சென்னை:—1, 1954.